# சான்றோர் குரல்

SAANDROR KURAL - Tamil Monthly மக்களுக்கான குரல் தமிழ் மாத இதழ்

● குரல் - 6 ● இதழ் - 2 ● ஏப்ரல், 2026 ● தமிழ் மாத இதழ் ● விலை ரூ.25/-

● Volume - 6 ● Issue - 2 ● April, 2026 ● Tamil Monthly ● Price Rs. 25/-


# 234 தொகுதியிலும்







# வேட்புமனு தாக்கல் துவங்கியது

## அரிசி கார்டுக்கு இலவச பிரிட்ஜ்





## தேர்தல் பிரச்சாரம் செய்வாரா?

- ரஜினிகாந்த் பதில்

## அரசு ஊழியர்களுக்கு

## 2 மடங்கு சம்பளம் உயர்வு

தேர்தல் ஆணையம் அதிரடி உத்தரவு

# அதிமுகவுக்கு முழு ஆதரவு



முன்னாள் முதல் அமைச்சரும், அதிமுக பொதுச் செயலாளருமான திரு. எடப்பாடி பழனிசாமி அவர்களை நேரில் சந்தித்த தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலன சபைத் தலைவரும், ‘சான்றோர் குரல்’ தமிழ் மாத இதழின் ஆசிரியருமான G.B. பச்சையப்பன் அவர்கள், வரவிருக்கும் 2026 சட்டப்பேரவை தேர்தலில் அதிமுகவுக்கு முழு ஆதரவு அளிப்பதாக தெரிவித்து, தேர்தலில் வெற்றி பெற வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.



திண்டுக்கல் தொகுதிக்கு திண்டுக்கல் சீனிவாசனை அறிவித்ததற்காக எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மாமன்ற உறுப்பினர் ராஜ்மோகன் தலைமையில் எம்ஜிஆர் சிலை அருகில் எடப்பாடியாரை பாராட்டி அக்கட்சியினர் பேருந்து நிலையத்தில் உள்ள பொதுமக்களுக்கும் பேருந்து ஆட்டோ இருசக்கர வாகனத்தில் பயணம் செய்யும் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி இரட்டை இலை சின்னத்திற்கு வாக்களிக்குமாறு வாக்கு சேகரித்து மகிழ்ச்சி அடைந்தனர். இந்நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் சுப்பிரமணியன்,வீ.டி. ராஜன், மோகன், y.சேசு, பிஜிஎம் முரளி, அம்மா பேரவை மாவட்ட செயலாளர் பாரதி முருகன், மாணவரணி ராஜேஷ் கண்ணன், வர்த்தக அணி மீனாட்சி சுந்தரம், மீன்வள ரவிக்குமார், கிழக்குப் பகுதி அம்மா பேரவை இணைச் செயலாளர் கார்த்தி, மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் நவனி, மேற்கு பிரதிநிதி ராஜப்பாஎன்றசேசுராஜ் , மாவட்ட தொழில்நுட்ப இணைச் செயலாளர் கோபால்சாமி, மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# சான்றோர் குரல்

SAANDROR KURAL - TAMIL MONTHLY  தமிழ் மாத இதழ்

● குரல் - 6 ● இதழ் - 2 ● ஏப்ரல், 2026 ● தமிழ் மாத இதழ் ● விலை ரூ.25/-

●Volume-6 ●Issue-2 ●April,2026 ●Monthly ●PriceRs.25/-



நிறுவனர் / ஆசிரியர் / வெளியீட்டாளர்
G.B. **பச்சையப்பன்**

கௌரவ ஆசிரியர்
டாக்டர் M.A.M.**ராமசாமி** அவர்களின்
முன்னாள் முதன்மைச் செயலாளர்
செட்டிநாடு S. **ராஜேந்திரன்**

ஆலோசகர்கள்
நிதில் & கோ S.R.P. **ராஜன்**
நடிகர் பயில்வான் **ரங்கநாதன்**
R. **கதிரவன்**
மூத்த செய்தியாளர், பாலிமர் தொலைக்காட்சி.

நிர்வாக ஆசிரியர்கள்
R. பிரேம் சந்தர்
S.R. ரஞ்சித்
செய்தி வாசிப்பாளர், பாலிமர் தொலைக்காட்சி.

உதவி ஆசிரியர்கள்
R. ரிச்சர்ட் ராஜ், K. முகமது அலி
S. சதீஷ்குமார், K. குட்டி கிருஷ்ணன்
L. லிங்கேஷ்வரன்
G.K. பாண்டியநேரு (தேனி)

நிருபர்கள்
V. நரேஷ்குமார் (செங்கல்பட்டு)
G. ராஜ்குமார் (விருதுநகர்)
P. ஆகாஷ் (சென்னை)
M.ஆகாஷ்குமார் (திருவண்ணாமலை)
K. தினேஷ் (மத்திய சென்னை)
M. தினேஷ்
லட்சுமணன், (திண்டுக்கல்)

புகைப்பட கலைஞர்
எ. சங்கர்

VRJ Graphics
பக்க வடிவமைப்பு:
90941 19636

நிர்வாக மேற்பார்வையாளர்கள்
P. **அஜய்** B.Com., MBA., P. **ஆகாஷ்** B.Com.,

சட்ட ஆலோசகர்கள்
E. **யோபு** M.Com., LLB, சென்னை உயர்நீதிமன்றம் (99417 56241)
D. **நவீன் சந்தர்** B.Sc.,BL, சென்னை உயர்நீதிமன்றம் (98942 30312)
D.K. **பார்த்திபன்** B.E., LLB, சென்னை உயர்நீதிமன்றம் (99411 33979)

பதிவு அலுவலகம் :
நெ.E-44, ராஜா முத்தையாபுரம்,
ராஜா அண்ணாமலைபுரம், மந்தைவெளி, சென்னை - 028

நிர்வாக அலுவலகம்:
நெ.22/2, சி.பி.கோயில் தெரு, கச்சேரி ரோடு,
மயிலாப்பூர், சென்னை - 600004
தொடர்பு எண்: 044 - 48588401 / 9962235025

அனைத்து சட்ட விதிகளும்/ உரிமைகளும் சென்னை நீதிமன்றத்திற்குட்பட்டது.


# ஆசிரியர் கடிதம்...

## தேர்தல் நாளில் தொழிலாளர்களுக்கு ஊதியத்துடன் விடுப்பு

தேர்தல் நடைபெறும் நாளில் தொழிலாளர்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளிக்க வேண்டும் என்று அனைத்து வகை நிறுவனங்களுக்கும் தொழிலாளர் நல ஆணையர் உத்தரவிட்டுள்ளார். விடுப்பு அளிக்காத நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பாக தொழிலாளர் நல ஆணையர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: கேரளம், புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தல் ஏப்.9-ம் தேதியும், தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஏப்.23-ம் தேதியும் நடைபெறும் என இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951-ன்கீழ் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவுரைகளின்படி, தமிழகத்தில் உள்ள தொழில் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் உட்பட அனைத்து வர்த்தக நிறுவனங்கள், கடைகள், ஓட்டல்கள், தோட்ட நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், பீடி - சுருட்டு நிறுவனங்கள், தொழிற்சாலைகள், கட்டுமானம் உட்பட அனைத்து அமைப்புசாரா தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றும் தினக்கூலி, தற்காலிக, ஒப்பந்த தொழிலாளர்கள் உட்பட அனைத்து தொழிலாளர்கள், பணியாளர்களுக்கும், தேர்தல் நடைபெறும் ஏப்.9 (வியாழன்), ஏப். 23 (வியாழன்) ஆகிய நாட்களில் வாக்களிக்க ஏதுவாக அன்றைய தினம் ஊதியத்துடன் கூடிய விடுப்பு (Paid Holiday) வழங்கப்பட வேண்டும் என சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், வேலை அளிப்போர் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.தேர்தல் நாளில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளிக்கத் தவறும் நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**புகார் தெரிவிக்கலாம்:** இதுதொடர்பாக புகார் அளிக்க தொழிலாளர் நலத் துறை சார்பில் மாநில, மாவட்ட அளவில் கட்டுப்பாட்டு அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. விடுமுறை அளிக்காத நிறுவனங்கள் குறித்து பொதுமக்கள், தொழிலாளர்கள் ஆகியோர் கீழ்க்கண்ட கட்டுப்பாட்டு அறைஅதிகாரிகளை தொடர்புகொண்டு புகார் தெரிவிக்கலாம்.

அதிகாரிகளின் பெயர், செல்போன் எண் விவரம்: தொழிலாளர் இணை ஆணையர், மாநில அளவிலான ஒருங்கிணைப்பாளர், சென்னை - எல்.ரமேஷ் (7904646090), சென்னை அமலாக்கப் பிரிவு தொழிலாளர் உதவி ஆணையர்கள்: முதல் வட்டம் - எல்.ஷோபனா (7299007334), 2-வது வட்டம் - பி.பழனி (7904802429), 3-வது வட்டம் - எஸ்.சிவக்குமார் (9043555123).இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தேர்தல் நடைபெறும் நாளில் தொழிலாளர்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுப்பு அளிக்க வேண்டும் என்று அனைத்து வகை நிறுவனங்களுக்கும் தொழிலாளர் நல ஆணையர் உத்தரவிட்டுள்ளார். விடுப்பு அளிக்காத நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தகவல் சான்றோர் குரல் மாத இதழின் சார்பாக ஆசிரியர் ஜி.பி. பச்சையப்பன் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டார்.




**G.B.பச்சையப்பன்**
தலைமை ஆசிரியர்

# பாஜக ஆட்சியில் வன்முறையிலிருந்து அமைதி பாதைக்கு மாறிய அசாம்



அசாம் மாநிலம் கடந்த 10 ஆண்டு கால பாஜக ஆட்சியில் வன்முறையிலிருந்து அமைதி பாதைக்கு மாறியுள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்தார்.

அசாம் சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு 'எனது வாக்குச் சாவடியே வலிமையானது' என்ற பிரச்சாரத்தின் கீழ் அசாம் மாநில பாஜக வாக்குச்சாவடி நிலை முகவர்களுடன் பிரதமர் நரேந்திர மோடி நேற்று காணொலி வாயிலாக உரையாடினார்.

அப்போது அவர் பேசியதாவது: அசாம் மாநிலம் நீண்ட காலமாக ஸ்திரமின்மையால் பாதிக்கப்பட்டிருந்தது. ஆனால், கடந்த பத்தாண்டுகளில் பாஜகவின் 'இரட்டை இன்ஜின்' அரசு மேற்கொண்ட நேர்மையான முயற்சிகளால் அமைதி பாதைக்கு திரும்பியுள்ளது.

மத்தியிலும் மாநிலத்திலும் பாஜக ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, வடகிழக்கு மாநிலங்களில் பல்

## பிரதமர் மோடி பெருமிதம்

வேறு அமைப்புகளுடன் 12 அமைதி ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. முந்தைய காங்கிரஸ் ஆட்சியில் வெறும் காகித அளவில் மட்டுமே ஒப்பந்தங்கள் போடப்பட்டன. அவை வெறும் செய்திகளுக்காகவும், மக்களை திசைதிருப்புவதற்காகவுமே பயன்படுத்தப்பட்டன.

அசாம் மாநிலம் வன்முறையில் தத்தளித்த காலத்தை நாம் பார்த்திருக்கிறோம். காங்கிரஸ் ஆட்சியில் இளைஞர்கள் அமைதியற்ற சூழலுக்குத் தள்ளப்பட்டனர். போடோ இன மக்களின் கோரிக்கைகளை காங்கிரஸ் அரசு வஞ்சித்தது. ஆனால், இன்று அசாம் புதிய தன்னம்பிக்கையுடன் காணப்படுகிறது. அமைதி ஒப்பந்தங்களை நாங்கள் அடிப்படையில் இருந்து மிகத் துல்லியமாகச் செயல்படுத்தி வருகிறோம்.

பாஜகவின் மற்றுமொரு வெற்றிக்காக அனைவரும் கடுமையாக உழைத்து வருகிறீர்கள். உங்களைப் போலவே நானும் கட்சியின் தொண்டன்தான். எனக்கு அளிக்கப்படும் பொறுப்புகளை நான் செவ்வனே செய்து வருகிறேன்.

முதல் முறை வாக்களிக்கும் இளைஞர்களுக்கு, காங்கிரஸின் முந்தைய தவறான ஆட்சி குறித்து எடுத்துரைக்க வேண்டியது அவசியம். ஒரு சிறிய தவறு கூட மாநிலத்தை மீண்டும் பழைய நிலைக்குத் தள்ளிவிடும். இதனை அவர்களுக்கு முறையாக எச்சரித்திட வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

அசாமில் உள்ள 126 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான தேர்தல் ஏப்ரல் 9-ம் தேதி நடைபெற உள்ளது. இம்மாநிலத்தில் கடந்த 2016-ம் ஆண்டு முதல் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## பெட்ரோல், டீசல் தொடர்பான

# வதந்திகளை நம்ப வேண்டாம்

## பிரதமர் மோடி அறிவுரை

பெட்ரோல், டீசல் தொடர்பான வதந்திகளை நம்ப வேண்டாம் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவுறுத்தி உள்ளார்.

மாதத்தின் கடைசி ஞாயிற்றுக் கிழமையான நேற்று 132-வது மனதின் குரல் வானொலி நிகழ்ச்சி ஒலிபரப்பப் பட்டது. இதில் பிரதமர் மோடி பேசியதாவது: கரோனா பெருந்தொற்று காலத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் மிக நீண்ட காலம் நீடித்தன. கரோனா காலத்துக்குப் பிறகு ஒட்டுமொத்த உலகமும் வளர்ச்சிப் பாதையில் முன்னேறிச் செல்லும் என்று அனைவரும் எதிர்பார்த்தோம். ஆனால் உலகின் பல்வேறு பகுதிகளில் நடைபெறும் போர்களால் பிரச்சினைகள் தொடர்கின்றன.

தற்போது சுமார் ஒரு மாதமாக மேற்காசிய போர் தீவிரமடைந்து வருகிறது. அந்த பிராந்தியத்தை சேர்ந்த கோடிக்கணக்கான மக்கள் போரால் பாதிக்கப்பட்டு உள்ளனர். சுமார் ஒரு கோடிக்கும் மேற்பட்ட இந்தியர்கள் வளைகுடா நாடுகளில் வசிக்கின்றனர். வளைகுடா மக்கள் மற்றும் இந்தியர்களின் பாதுகாப்பு குறித்து மத்திய அரசு மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. போர் சூழலில் இந்தியர்களை பாதுகாத்து அரவணைத்துச் செல்லும் வளைகுடா நாடுகளின் அரசுகளுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காசிய போரால் உலகம் முழுவதும் பெட்ரோல், டீசலுக்கு பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. இந்த சவாலை நாம் திறம்பட எதிர்கொண்டு வருகிறோம். உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளிடம் இந்தியாவுக்கு நெருங்கிய நட்புறவு நீடிக்கிறது. இதன் மூலம் எரிபொருள் பிரச்சினையை சமாளித்து வருகிறோம். ஒட்டுமொத்த இந்தியர்களும் ஒன்றிணைந்து புதிய சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

போர் விவகாரத்தில் முற்றிலுமாக அரசியலை தவிர்க்க வேண்டும். இது 140 கோடி மக்களின் நலன் சார்ந்



பரப்புவோர் சொந்த நாட்டுக்கே துரோகம் இழைக்கின்றனர்.

இந்திய மக்களிடம் ஒரு வேண்டுகோளை முன்வைக்கிறேன். எரிபொருள் தொடர்பான (பெட்ரோல், டீசல்) வதந்திகளை நம்ப வேண்டாம். அரசு நிர்வாகம் அளிக்கும் தகவல்களை மட்டுமே நம்புங்கள், அதற்கேற்ப செயல்படுங்கள். கடந்த காலங்களில் நாம் பல்வேறு சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு உள்ளோம். 140 கோடி இந்தியர்களின் பலத்தால் இந்த சவாலிலும் நிச்சயமாக வெற்றி பெறுவோம்.

இந்திய மக்கள் தங்களது உடல் நலனில் அதிக அக்கறை செலுத்த வேண்டுகிறேன். மனம், உடல் நலனை மேம்படுத்த நாள்தோறும் யோகா செய்ய வேண்டும். பானங்கள் மற்றும் உணவு வகைகளில் சர்க்கரை அளவை குறைத்துக் கொள்ள வேண்டும். சமையல் எண்ணெய் அளவை 10 சதவீதம் அளவுக்கு குறைத்து கொள்ள வேண்டும். இந்திய மீனவர்கள் கடலில் பணியாற்றும் மாபெரும் வீரர்கள் ஆவர்.

உதவிகளை வழங்கி வருகிறோம். ஜம்மு காஷ்மீர் கிரிக்கெட் அணி ரஞ்சி கோப்பையை வென்று புதிய சாதனைபடைத்திருக்கிறது. இது அந்த பகுதி இளம் தலைமுறையினருக்கு மிகுந்த ஊக்கம் அளிப்பதாக உள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் கோடை காலம் தொடங்கி உள்ளது. இந்த நேரத்தில் தண்ணீர் சேமிப்பு நடவடிக்கைகளில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

உத்தர பிரதேசம் வாராணசியில் அண்மையில் ஒரு மணி நேரத்தில் 2.51 லட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டன. இதன் மூலம் புதிய கின்னஸ் உலக சாதனை படைக்கப்பட்டு உள்ளது. பிஎம் சூர்ய கர் முப்ட் முஜிலி யோஜனா திட்டத்தின் மூலம் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சூரிய மின் உற்பத்தி அதிகரித்து வருகிறது. மரக்கன்று நடுதல், சூரிய மின் உற்பத்தி உள்ளிட்ட திட்டங்களால் பருவநிலை மாறுபாடு பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியும்.

இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

### அரசு ஊழியர்களுக்கு

# 2 மடங்கு சம்பளம் உயர்வு

## தேர்தல் ஆணையம் அதிரடி உத்தரவு




இப்பயிற்சித் திட்டத்தில், 3,32,231 அலுவலர்களுக்கு வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களின் கடமைகள், பங்களிப்புகள் பொறுப்புகள் தொடர்பாக பயிற்சி அளிக்கப்பட்டது.

தமிழகம் தலைமை தேர்தல் அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டு உள்ள அறிககையில் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு சட்ட சபை தேர்தல் நடத்தப்படுவதன் ஒரு பகுதியாக, மாநிலம் முழுவதும் பல்வேறு தரப்பினருக்கான பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. 234 சட்டசபை தொகுதிகளிலும், வாக்குச் சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான முதற்கட்டப் பயிற்சி கடந்த 28, 29-ந்தேதிகளில் நடைபெற்றது. இப்பயிற்சித் திட்டத்தில், 3,32,231 அலுவலர்களுக்கு வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களின் கடமைகள், பங்களிப்புகள் பொறுப்புகள் தொடர்பாக பயிற்சி அளிக்கப்பட்டது.

தேர்தல் தொடர்பான பணிகளைத் திறம்பட நிர்வகிப்பதற்கான அவர்களின் திறனை வலுப்படுத்தவும். நடை முறைகளைச் சரியாக செயல்படுத்துவதை உறுதி செய்வதற்கும்.சட்டத்திற்கு உட்பட்டு 2026 தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தலை சுதந்திரமாகவும், வெளிப்படையாகவும் நடத்துவதற்கு தங்களை தயார்படுத்திக் கொள்வதை உறுதிசெய்வதே இந்தப்பயிற்சித் திட்டத்தின் நோக்கமாகும். சட்டசபை தேர்தல் பணிகளுக்காக நியமிக்கப்பட்டு உள்ள வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள், வாக்குப்பதிவு அலுவலர்கள், வாக்கு எண்ணும் மேற்பார்வையாளர், வாக்கு எண்ணும் உதவியாளர் மற்றும் நுண்பார்வையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய விகிதங்களை இந்திய தேர்தல் ஆணையம் உயர்த்தி உள்ளது.

அதன்படி வாக்குச்சாவடி தலைமை அலுவலருக்கு ரூ.1700 என்பது ரூ.3 ஆயிரம் ஆகவும், வாக்குப்பதிவு அலுவலருக்கு ரூ.1300 என்பது ரூ.2600 ஆகவும், வாக்கு எண்ணும் மேற்பார்வையாளருக்கு ரூ.850 என்பது ரூ.1500 ஆகவும், வாக்கு எண்ணும் உதவியாளருக்கு ரூ.650 என்பது ரூ.1400 ஆகவும், நுண்பார்வையாளருக்கு ரூ.1000 என்பது ரூ.2 ஆயிரம் ஆகவும் உயர்த்தப்பட்டு உள்ளது.

அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் கண்காணிப்பு குழுக்கள் 24 மணி நேரமும் தீவிரமாகக்கண்காணிப்புப்பணியில் ஈடுபட்டு உள்ளன.

நேற்றைய நில வரப்படி, இக்குழுக்களால் ரூ.61.98 கோடி, ரூ.1.17 கோடி மதிப்பிலான மதுபாட்டில்கள், ரூ.8.39 கோடி மதிப்பிலான போதைப்பொருட்கள், ரூ.197.35 கோடி மதிப்பிலான தங்கம், வெள்ளி உள்ளிட்டவை ரூ.27.51 கோடி மதிப்பிலான இலவசமாக வழங்க வைத்திருந்தவை உள்ளிட்ட இதர பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன. இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# தமிழகத்தில் 60 சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்வு அமல்

## காய்கறிகள், பழங்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் விலை உயரும்

தமிழகத்தில் உள்ள 60 சுங்கச்சாவடிகளில் கட்டணம் உயர்வு அமலுக்கு வந்தது. இதனால் 5 சதவீதம் முதல் 7 சதவீதம் வரை உயர்த்தப்படும் என்று தேசிய நெடுஞ்சாலை ஆணையம் தெரிவித்துள்ளது. மேலும் காய்கறிகள், பழங்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் விலையும் உயர வாய்ப்புள்ளது. இந்தியாவில் உள்ள அனைத்து தேசிய நெடுஞ்சாலைகளும் ஒன்றிய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் தேசிய நெடுஞ்சாலை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன. இந்த அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நாட்டின் முக்கிய சாலைகளின் கட்டுமானம், பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், சாலைகளில் பயணம் செய்யும் வாகனங்களிடமிருந்து சுங்கச்சாவடிகள் மூலம் கட்டணம் வசூலிக்க அனுமதி வழங்கப்படுகிறது. பல தேசிய நெடுஞ்சாலை திட்டங்கள் பொதுத்துறை மற்றும் தனியார் கூட்டுத்திட்ட முறையில் செயல்படுத்தப்படுவதால், சுங்கச்சாவடிகள் தனியார் நிறுவன ங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஒப்படைக்கப்படுகின்றன.




அந்த ஒப்பந்தத்தின் படி, குறிப்பிட்ட காலத்திற்கு வாகனங்களிடமிருந்து சுங்க கட்டணம் வசூலிக்கும் உரிமை வழங்கப்படுகிறது. நாடு முழுவதும் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன. சுங்கச்சாவடிகளில் தமிழ்நாட்டில் மட்டும் 77 சுங்கச்சாவடிகள் உள்ளன. சுங்கக் கட்டணங்கள் ஒவ்வொரு ஆண்டும் மறுபரிசீலனை செய்யப்பட்டு உயர்த்தப்படுவது வழக்கமாக உள்ளது. பொதுவாக 5 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை கட்டண உயர்வு அமல்படுத்தப்படுகிறது. சில இடங்களில் போக்குவரத்து அளவு, சாலை பராமரிப்பு செலவு, பணவீக்கம் உள்ளிட்ட காரணிகளை கருத்தில் கொண்டு 15 சதவீதம் வரை கட்டணம் உயர்த்தப்படும். மேலும், தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்ட காலத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டண உயர்வு காலமும் மாறுபடுகிறது. 1992ம் ஆண்டு ஒப்பந்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளில் ஏப்ரல் மாதத்தில் கட்டணம் உயர்த்தப்படுகிறது.

அதேபோல் 2008ம் ஆண்டு ஒப்பந்தத்தின் கீழ் அமைக்கப்பட்ட சாலைகளில் உள்ள சுங்கச்சாவடிகளில் செப்டம்பர் மாதத்தில் கட்டண உயர்வு நடைமுறைக்கு வருகிறது. அதன்படி, தமிழகத்தில் நள்ளிரவு முதல் 60 சுங்கச்சாவடிகளில் சுங்கக் கட்டணம் உயர்ந்துள்ளது. இந்த புதிய அறிவிப்பின் படி கார், ஜீப், வேன், லைட் கமர்ஷியல் வாகனங்கள், பேருந்துகள், லாரிகள் உள்ளிட்ட அனைத்து வகை வாகனங்களுக்கும் சுங்கச்சாவடி கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த உயர்வு மாநிலம் முழுவதும் உள்ள தேசிய நெடுஞ்சாலை சுங்கச்சாவடிகளில் நள்ளிரவு 12 மணி முதல் கட்டண உயர்வு அமலுக்கு வந்துள்ளது. மேலும் சுங்கச்சாவடிகளில் கார், ஜீப், வேன் போன்ற லேசான வாகனங்களுக்கு தற்போது வசூலிக்கப்படும் கட்டணத்தை விட ரூ.10 முதல் ரூ.40 வரையும், லாரி, பேருந்து போன்ற கனரக வாகனங்களுக்கு ரூ.50 முதல் ரூ.200 வரை கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படும். மாதாந்திர பாஸ் கட்டணம் ரூ.300 முதல் ரூ.350 வரை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதன்படி மொரட்டாண்டி, பல்லிக்கொண்டா, பெடகல்லுப்பள்ளி (வாணியம்பாடி), கானியூர், கிருஷ்ணகிரி, பரனூர், ஆத்தூர் (திண்டிவனம்), மாதூர், நல்லூர், சூரப்பட்டு, வானகரம், ஸ்ரீபெரும்புதூர் (பென்னலூர்), சென்னசமுத்திரம், எஸ்.வி.புரம், பட்டறைப்பெரும்புதூர், கல்லக்குடி, மணகத்தி, குருங்குடி (வீராணநல்லூர்), நாங்கிலிகொண்டான், காரியமங்கலம், நாகம்பட்டி, கோத்தட்டை, கரகத்தஹள்ளி, கங்காரம்பாளையம், செலியமேடு, கீழ்குப்பம், பொன்னாலகரம், வள்ளம், ஏனம்காரியந்தல், தென்னமாதேவி, கதவாணி, வேலம்பட்டி, மதுக்கரை, எச். புதுப்பட்டி, பொங்கலூர், வலவந்தாங்கோட்டை, கப்பலூர், எட்டூர்வட்டம், சாலைப்புதூர், நாங்குநேரி, பூதகுடி (விராலிமலை), சிட்டம்பட்டி (மேலூர்), லெச்சுமணப்பட்டி, லெம்பலகுடி, கோடிக்கோட்டை, வெண்ணாத்தூர், பழைய கந்தர்வக்கோட்டை, செண்பகம்பேட்டை, திருப்பாச்சேதி வடக்கு, போகலூர், வாகைக்குளம், திருப்பதிசாரம், உப்பார்பட்டி, சத்திரப்பட்டி, புதூர், கோவில்வேணி, வெம்புக்குடி, மணம்பாடி, புதூர்பாண்டியபுரம், எலியார்பதி, வலவந்தாங்கோட்டை ஆகிய 60 சுங்கச்சாவடிகள் கட்டண உயர்வு அமலுக்கு வந்துள்ளது. இதனால் காய்கறிகள், பழங்கள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் விலை உயர வாய்ப்புள்ளது. ●

## 234 தொகுதியிலும் வேட்புமனு தாக்கல் துவங்கியது

# மு.க.ஸ்டாலின், சீமான், விஜய் உட்பட 572 பேர் வேட்புமனு

தமிழகத்தில் மொத்தமுள்ள 234 தொகுதிகளிலும் வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கியது. அதன்படி, காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை தேர்தல் நடத்தும் அதிகாரி அல்லது உதவி தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்யலாம். முதல் நாளில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மனு தாக்கல் செய்தார். அதேபோன்று பெரும்பாலான அமைச்சர்கள், நடிகர் விஜய், சீமான் உள்ளிட்ட 572 பேர் மனு தாக்கல் செய்தனர். தமிழ்நாட்டில் 17வது சட்டப்பேரவைக்கான பொதுத்தேர்தல் வருகிற ஏப்ரல் 23ம் தேதி நடைபெறுகிறது. அதன்படி, மொத்தமுள்ள 234 தொகுதிகளிலும் ஒரே கட்டமாக தேர்தல் நடக்கிறது. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் 30ம் தேதி முதல் ஏப்ரல் 6ம் தேதி வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம் என்று இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.



வேட்புமனுக்கள் மீது பரிசீலனை மே 7ம் தேதி நடைபெறும். ஏப்ரல் 9ம் தேதி மாலை 3 மணி வரை வேட்புமனுக்களை திரும்ப பெறலாம். வேட்புமனு தாக்கல் செய்யும் நேரம் காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை ஆகும். தமிழகத்தில் 30ம் தேதி முதல் ஏப்ரல் 6ம் தேதி வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டாலும், மார்ச் 30, ஏப்ரல் 2, 4, 6 ஆகிய 4 நாட்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்ய முடியும். மற்ற நாட்கள் அரசு விடுமுறை ஆகும். தமிழகத்தில் வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கியதையொட்டி அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டு இருந்தது. வேட்புமனு தாக்கல் செய்ய வரும்போது வேட்பாளர் உள்பட 5 பேர் மட்டுமே மனு தாக்கல் செய்யும் இடத்துக்கு அனுமதிக்கப்பட்டனர். வேட்புமனு தாக்கலுக்காக நேரில் வரும் வேட்பாளருடன் 3 கார்கள் மட்டுமே வர அனுமதிக்கப்பட்டன.

அதேநேரம் ஊர்வலமாக வர அனுமதி இல்லை. வேட்புமனு தாக்கல் செய்யும் இடங்களில்





சிசிடிவி கேமரா பொருத்தப்பட்டு, அனைத்து நடவடிக்கைகளும் பதிவு செய்யப்பட்டது. வேட்புமனு தாக்கல் செய்யும் இடங்களில் துணை ராணுவம் உள்பட தமிழ்நாடு போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வேட்புமனு தாக்கல் தொடங்கிய முதல் நாளிலேயே திமுக தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தார். அதன்படி நேற்று மதியம் 12.10 மணிக்கு கொளத்தூர் பேப்பர் மில்ஸ் சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலகம் சென்று அங்கிருந்த தேர்தல் நடத்தும் அதிகாரி சாந்தியிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். அங்கு ஏராளமான திமுக தொண்டர்கள் குவிந்திருந்தனர். மனு தாக்கல் செய்த பிறகு தொண்டர்களை பார்த்து கையசைத்தவாறு சென்றார்.

அதேபோன்று, தவெக தலைவர் விஜய் நேற்று மதியம் சென்னை, வியாசர்பாடியில் உள்ள அம்பேத்கர் கலைக்கல்லூரியில் தேர்தல் நடத்தும் அலுவலர் கீதாவிடம் பெரம்பூர் தொகுதியில் போட்டியிட மனு தாக்கல் செய்தார். நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் காரைக்குடி தொகுதியில் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். நாம் தமிழர் கட்சி சார்பில் போட்டியிடும் 234 வேட்பாளர்களும் நேற்று மனு தாக்கல் செய்தனர். திருச்சி மேற்கு தொகுதியில் திமுக சார்பில் அமைச்சர் கே.என்.நேரு வேட்புமனு தாக்கல் செய்தார். சென்னை, சைதாப்பேட்டை தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட அமைச்சர் மா.சுப்பிரமணியன் மனு தாக்கல் செய்தார். ஆதவ் அர்ஜுனா வில்லிவாக்கம் தொகுதியில் போட்டியிட மனு தாக்கல் செய்தார்.

இதேபோன்று திமுக சார்பில் பலர், அதிமுக வேட்பாளர்கள், தவெக உள்ளிட்ட பல்வேறு சுயேச்சை வேட்பாளர்களும் தமிழகம் முழுவதும் வேட்புமனு தாக்கல் செய்தனர். முதல் நாளான நேற்று மட்டும் 561 பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர். வேட்புமனு தாக்கல் செய்யும் இடங்களில் ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டு இருந்ததால், எந்த அசம்பாவித சம்பவமும் நடைபெறாமல் அமைதியான முறையில் மனு தாக்கல் நடந்தது. நேற்று தொடங்கி வருகிற 6ம் தேதி வரை 8 நாட்கள் வேட்புமனு தாக்கல் செய்யலாம் என்று தேர்தல் ஆணையம் அறிவித்து இருந்தாலும், 4 நாட்கள் அரசு விடுமுறை ஆகும். அதாவது, மார்ச் 31ம் தேதி (இன்று) மகாவீர் ஜெயந்தி, ஏப்ரல் 1ம் தேதி வங்கி ஆண்டு கணக்கு முடிவு, ஏப்ரல் 3ம் தேதி புனிதவெள்ளி, ஏப்ரல் 5 ஞாயிறு ஆகிய 4 நாட்கள் அரசு விடுமுறை ஆகும். மற்ற நாட்களான இன்று, ஏப்ரல் 2, 4, 6 ஆகிய 4 நாட்கள் மட்டுமே மனு தாக்கல் செய்ய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

வேட்பாளர்களுக்கான விதிமுறைகள்: அங்கீகரிக்கப்பட்ட தேசிய அல்லது மாநில கட்சி வேட்பாளராக இருந்தால் அவரை, அவர் போட்டியிடும் தொகுதியை சேர்ந்த ஒரு வாக்காளர் முன்மொழிய வேண்டும். பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்சி வேட்பாளர் அல்லது சுயேச்சை வேட்பாளர் என்றால் அந்த தொகுதியை சேர்ந்த 10 வாக்காளர்கள் அவரை முன்மொழிய வேண்டும். ஒருவர் 2 தொகுதிகளுக்கு மேல் வேட்புமனு தாக்கல் செய்யக்கூடாது. 2க்கும் மேலான தொகுதிகளில் வேட்புமனு தாக்கல் செய்தால், அவரது அனைத்து வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டு, தேர்தலில் நிற்க முடியாத நிலை ஏற்படும். https://suvidha.eci.gov.in என்ற இணைய தளம் மூலமும் வேட்புமனு தாக்கல் செய்யலாம்.

ஆனால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்புமனு தாக்கலின்போது நேரில் ஒப்படைக்க வேண்டும். வேட்பாளர்கள், வேட்புமனு தாக்கல் தேதியில் இருந்து 3 மாதத்துக்குள் எடுக்கப்பட்ட வேட்பாளரின் போட்டோவையே வேட்புமனுவில் இணைக்க வேண்டும். வேட்பாளர்கள், வேட்புமனு தாக்கல் நிறைவுநாளான வருகிற 6ம் தேதி மாலை 3 மணிக்குள் உறுதிமொழி பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

# அதிமுக தேர்தல் அறிக்கையை வெளியிட்டார் பழனிசாமி:

# அரிசி கார்டுக்கு இலவச பிரிட்ஜ் உட்பட பல திட்டங்கள் அறிவிப்பு



தமிழகத்தில் அதிமுக ஆட்சிக்கு வந்தால், அரிசி ரேஷன் கார்டுக்கு இலவச பிரிட்ஜ், குடும்பத்துக்கு ரூ.10 ஆயிரம், ஆண்டுக்கு 3 காஸ் சிலிண்டர் இலவசம் உட்பட பல திட்டங்களை அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தேர்தல் வாக்குறுதிகளாக அளித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையின் 234 தொகுதிகளுக்கும் ஏப்ரல் 23-ம் தேதி ஒரே கட்டமாகத் தேர்தல் நடைபெறுகிறது. இந்நிலையில், தேர்தல் அறிக்கையை அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி நேற்று வெளியிட்டார். அதனைக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி பெற்றுக் கொண்டார். மொத்தமாக அதில் 297 அறிவிப்புகள் இடம்பெற்றிருக்கின்றன. அதிமுக.வின் முழு தேர்தல் அறிக்கையில் கூறியிருப்பதாவது:

வரிச் சுமை மற்றும் விலைவாசி ஏற்றத்தைச் சமாளிக்க ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.10 ஆயிரம் சிறப்பு உதவித் தொகை வழங்கப்படும். குல விளக்கு திட்டத்தின் கீழ் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் குடும்பத் தலைவியின் வங்கிக் கணக்கில் மாதம் ரூ.2 ஆயிரம் உதவித் தொகை செலுத்தப்படும். மகளிரைப் போலவே, ஆண்களுக்கும் நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா பயணத் திட்டம் செயல்படுத்தப்படும். அம்மா இல்லம் திட்டம் மூலமாக வீடு இல்லாத ஏழைகளுக்குக் கிராமங்களில் கான்கிரீட் வீடுகளும், நகர்ப்புறங்களில் அடுக்குமாடி வீடுகளும் விலையில்லாமல் கட்டித் தரப்படும்.


மேலும், 100 நாட்கள் வேலை வாய்ப்புத் திட்டம் 150 நாட்களாக உயர்த்தப்படும். வேலைக்குச் செல்லும் 5 லட்சம் மகளிருக்கு ரூ.25 ஆயிரம் மானியத்துடன் இரு சக்கர வாகனங்கள் வழங்கப்படும். ஆண்டுக்கு 3 காஸ் சிலிண்டர்கள் விலையில்லாமல் வழங்கப்படும். முதியோர், கணவனை இழந்தவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான ஓய்வூதியம் ரூ.2 ஆயிரமாக உயர்த்தப்படும், வங்கிகளில் கல்விக் கடன் பெற்றுத் திருப்பிச் செலுத்த முடியாமல் உள்ளவர்களின் கடனை அரசே ஏற்கும்.

நெல் ஆதார விலை குவிண்டாலுக்கு ரூ.3,500 ஆகவும், கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4,500 ஆகவும் உயர்த்தப்படும். சிறு, குறு விவசாயிகளுக்கு உர மானியமாக ஆண்டுக்கு எக்டேருக்கு ரூ.15 ஆயிரம் வழங்கப்படும். விவசாயப் பணியின் போது உயிரிழக்கும் விவசாயிகளின் குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் இழப்பீடு வழங்கப்படும். வேலைக்காகக் காத்திருக்கும் பட்டதாரி இளைஞர்களுக்கு மாதம் ரூ.2 ஆயிரம் மற்றும் பிளஸ் 2 முடித்தவர்களுக்கு ரூ.1,000 உதவித் தொகை வழங்கப்படும். கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் 450 யூனிட்டாகவும், விசைத்தறிக்கு 1,400 யூனிட்டாகவும் உயர்த்தப்படும்.

மீன்பிடித் தடைக் கால நிவாரணம் ரூ.12 ஆயிரமாக உயர்த்தப்படும். பொங்கல் தொகுப்புடன் ரூ.1,000 ரொக்கம் வழங்கப்படும். அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு குளிர்சாதனப் பெட்டி (பிரிட்ஜ்) விலையில்லாமல் வழங்கப்படும். ஜல்லிக்கட்டுப் போட்டியில் உயிரிழக்கும் வீரர்களின் குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் வழங்கப்படும். கல்வி மற்றும் மருத்துவம் ஆகிய துறைகளைப் பொதுப் பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வலியுறுத்தப்படும். மத்திய வரி வசூலில் செஸ் மற்றும் கூடுதல் வரி ஆகியவற்றைப் பகிர்ந்தளிக்கப்படும் நிதியில் சேர்க்க வலியுறுத்தப்படும். இதுபோன்று 297 வாக்குறுதிகள் அதிமுக தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

தேர்தல் அறிக்கை வெளியிட்ட பின், செய்தியாளர்களிடம் பழனிசாமி கூறும்போது, ‘‘கூட்டணியில் உள்ள சிறிய கட்சிகளுக்கான தொகுதிப் பங்கீடு விரைவில் இறுதி செய்யப்படும். மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் நிதி ஆதாரங்களைப் பெருக்கி, மக்கள் நலத்திட்டங்கள் தொய்வின்றிச் செயல்படுத்தப்படும். அதிமுக மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றதும் தமிழகத்தில் மதுக்கடைகள் படிப்படியாகக் குறைக்கப்படும். அரசியல் சூழலுக்குத் தகுந்தவாறுதான் கூட்டணிகள் அமைக்கப்படுகின்றன. அந்தந்தக் கட்சிகளின் பலத்துக்கு ஏற்பவே தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன” என்று தெரிவித்தார்.

## வெற்றியைத் தக்கவைக்க தொகுதிகள் ஒதுக்கீட்டில்




# சாதுர்யமாகச் செயல்பட்ட பழனிசாமி

**கடந்த தேர்தலில் அதிமுக-வுக்கு பெரிதும் கைகொடுத்த கொங்கு மண்டலம் மற்றும் சேலம், தருமபுரி உள்ளிட்ட மாவட்டங்களில், கூட்டணி கட்சிகளுக்கு தொகுதிகளை ஒதுக்கியதில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி மிகவும் சாதுர்யமாகச் செயல்பட்டிருப்பதாக அவரது கட்சியினரே சிலாகித்துச் சொல்கிறார்கள்.**

இதுகுறித்து நம்மிடம் பேசிய சேலம் மாவட்ட அதிமுக நிர்வாகிகள் சிலர், "கடந்த முறை கூட்டணிக் கட்சிகள் வெற்றிபெற்ற தொகுதிகளை மீண்டும் அவர்களுக்கே கொடுத்து அவர்களை வளர்த்துவிட விரும்பாத பழனிசாமி, முடிந்தவரைக்கும் தொகுதிகளை மாற்றிக் கொடுத்திருக்கிறார்.

பழனிசாமியின் சொந்த மாவட்டமான சேலத்தில், மொத்தமுள்ள 11 தொகுதிகளில் கடந்த முறை அதிமுக 9 தொகுதிகளிலும் கூட்டணிக் கட்சியான பாமக சேலம் மேற்கு, மேட்டூர் என 2 தொகுதிகளிலும் போட்டியிட்டன. அப்போது 10 தொகுதிகளை அதிமுக கூட்டணி அள்ளிய போதும் சேலம் வடக்கை மட்டும் திமுக-விடம் இருந்து மீட்க முடியவில்லை.

இப்போது சேலம் வடக்கு எம்எல்ஏ-வான ராஜேந்திரன் அமைச்சராகவும் இருக்கிறார். அதனால் அவருடன் மோதி விஷப்பரீட்சை செய்ய வேண்டாம் என முடிவெடுத்த பழனிசாமி, அந்தத் தொகுதியை இம்முறை பாமக-வுக்கு ஒதுக்கிவிட்டார். அதற்குப் பதிலாக, கடந்த முறை பாமக வென்ற மேட்டூர் தொகுதியை அதிமுக எடுத்துக் கொண்டுள்ளது. கடந்த முறை சேலம் மேற்கில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பாமக அருள் இப்போது ராமதாஸ் பக்கம் இருக்கிறார்.

அதனால் நிச்சயம் அவர் எப்படியும் அங்கே போட்டியிடலாம் என ஊகித்த பழனிசாமி, சிதறிப் போகும் பாமக வாக்கு வங்கியை நம்பி பரிசோதனை செய்ய விரும்பாமல் அந்தத் தொகுதியை அன்புமணிக்கே தந்துவிட்டார். அருளை வீழ்த்த அருமையான சான்ஸ் என நினைத்து அன்புமணியும் இதற்கு சம்மதித்து விட்டார்.

ஆனால், உங்கள் பஞ்சாயத்தை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என பழனிசாமி மிகவும் தந்திரமாக தொகுதியை அன்புமணி பக்கம் தள்ளிவிட்டுவிட்டார் என்பது தான் யதார்த்தம். தனது சாதுர்யமான இந்த நடவடிக்கைகள் மூலம் சேலத்தில் மீண்டும் அதிமுக 9 தொகுதிகளை கைப்பற்றும் சூழலை உருவாக்கி இருக்கிறார் பழனிசாமி.

இதுபோலவே தருமபுரி மாவட்டத்தில் உள்ள 4 தொகுதிகளில் தருமபுரி, பென்னாகரம் தொகுதிகளை மீண்டும் பாமக-வுக்கே தந்துவிட்டார் பழனிசாமி. இதில் பென்னாகரம் ஜி.கே.மணியின் தொகுதி என்பதால் இம்முறை அங்கே பாமக அணிகளுக்குள்ளேயே குஸ்தி நடக்கலாம் என்பது பழனிசாமியின் கணிப்பு. அதனால், அங்கே அதிமுக வேட்பாளரை நிறுத்தி பதம்பார்க்க அவர் விரும்பவில்லை.

கொங்கு மண்டலத்திலும் இதே நிலை தான். கோவை மாவட்டத்தில் மொத்தம் உள்ள 10 தொகுதிகளில் கடந்த முறை அதிமுக 9 தொகுதிகளிலும் பாஜக ஒரு தொகுதியிலும் வெற்றி பெற்றன. இதில் கோவை தெற்கை இம்முறை பாஜக வசம் இருந்து சாதுர்யமாக திரும்பப் பெற்றுவிட்டார் பழனிசாமி. அதற்குப் பதிலாக கோவை வடக்கை பாஜக-வுக்கு ஒதுக்கி இருக்கிறார்.

ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் உள்ள 8 தொகுதிகளில் கடந்த முறை அதிமுக 4 தொகுதிகளிலும் பாஜக 1 தொகுதியிலும் வென்றன. இம்முறையும் அங்கே மொடக்குறிச்சியை பாஜக-வுக்கே தந்துவிட்டவர், ஈரோடு மேற்கில் அமைச்சர் முத்துசாமியிடம் மோத விரும்பாமல் அந்தத் தொகுதியை தமாகா-வுக்கு தந்துவிட்டார். நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி தொகுதியில் கடந்த முறை போட்டியிட்டு தோற்றுப் போனது பாஜக. அதனால் தைரியமாக அந்தத் தொகுதியை அவர்கள் பக்கமே தள்ளிவிட்டிருக்கிறார்.

நாமக்கல் மாவட்டத்திலும் அமைச்சர் மதிவேந்தனின் தொகுதியான ராசிபுரத்தை பாஜக-வுக்கு ஒதுக்கிவிட்டார் பழனிசாமி. தனது இந்த நடவடிக்கைகள் மூலம் அதிமுக-வுக்கு செல்வாக்கான சேலம் மற்றும் கொங்கு மண்டலத்தில் வெற்றியை தக்கவைப்பதற்கான வேலைகளை சத்தமில்லாமல் செய்து முடித்திருக்கும் பழனிசாமி, ஓபிஎஸ் விவகாரத்தால் தனக்கு சாதகமாக இருக்காது என நினைக்கும் தென் மாவட்டங்களில் பாஜக-வுக்கும் தினகரனுக்கும் முக்கியத்துவம் கொடுத்து தொகுதிகளை ஒதுக்கியும் சரிவை சமாளித்திருக்கிறார்" என்றனர்.

### முதல் கட்டமாக 23 பேர் அறிவிப்பு

# அதிமுக வேட்பாளர் பட்டியல் வெளியீடு

- எடப்பாடியில் பழனிசாமி போட்டி
- கூட்டணி கட்சிகளின் தொகுதிகளும் அறிவிப்பு




அதிமுகவில் முதற்கட்டமாக 23 வேட்பாளர் பட்டியலை, அக்கட்சியின் பொது செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று வெளியிட்டார். அதில் பழனிசாமி, எடப்பாடி தொகுதியில் போட்டியிடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முதல் பட்டியலில் பெண்கள், இஸ்லாமியர்கள் உள்ளிட்ட முக்கிய சமுதாயங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இதேபோல், கூட்டணி கட்சிகளான பாஜ, பாமக, அமமுகவுக்கும் தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், அதிமுக கூட்டணியில் போட்டியிடும் கூட்டணி கட்சிகளுக்கான தொகுதி ஒதுக்கீடு பட்டியலை அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, சென்னை ராயப்பேட்டையில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று வெளியிட்டார்.

இதில், பாஜவுக்கு 27 தொகுதிகள், பாமகவுக்கு 18 தொகுதிகள், அமமுகவுக்கு 11 தொகுதிகள், தமாகாவுக்கு 5 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஐஜேகேவுக்கு 2 தொகுதிகள், தமிழக மக்கள் முன்னேற்ற கழகத்திற்குஒரு தொகுதி, புரட்சி பாரதம் கட்சிக்கு ஒரு தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதிமுக கூட்டணியில் இதுவரை கூட்டணி கட்சிக்கு 65 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 169 தொகுதிகளில் அதிமுக நேரடியாக களம் இறங்குகிறது. புரட்சி பாரதம் கட்சி இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுகிறது. அதன்படி அதிமுக 170 இடங்களில் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிட உள்ளது.

இந்த நிலையில், அதிமுக தேர்தல் அறிக்கையை எடப்பாடி பழனிசாமி வெளியிட்டார். அப்போது அதிமுக வெற்றி பெற்றால் அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச பிரிட்ஜ் உள்ளிட்ட 297 அறிவிப்புகளை வெளியிட்டார். இதைத்தொடர்ந்து எடப்பாடி பழனிசாமி நேற்று மாலை 4 மணிக்கு மயிலாப்பூர் தொகுதியில்

இருந்து தனது தேர்தல் பிரசாரத்தை தொடங்கினார். முன்னதாக, நேற்று காலை அதிமுகவில் முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை அவர் வெளியிட்டார். அதில், 23 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியல் வெளியாகியுள்ளது.

இதில் எடப்பாடி தொகுதியில் எடப்பாடி பழனிசாமி போட்டியிடுகிறார். ஏற்கனவே விழுப்புரம் தேர்தலில் கடந்த தேர்தலில் நின்று தோல்வி அடைந்த முன்னாள் அதிமுக அமைச்சரும் தற்போதைய மக்களவை எம்பியுமான சி.வி.சண்முகம் இந்த முறை மயிலம் தொகுதியில் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 23 வேட்பாளர்கள் விவரம் வருமாறு தொகுதியில் எடப்பாடி தொகுதியில் எடப்பாடி பழனிசாமி, வேப்பனஹல்லி தொகுதியில் கே.பி.முனுசாமி, திண்டுக்கல் தொகுதியில் திண்டுக்கல் சீனிவாசன், நத்தம் தொகுதியில் நத்தம் விசுவநாதன், தொண்டாமுத்தூரில் எஸ். பி.வேலுமணி, குமாரபாளையத்தில் பி.தங்கமணி, ராயபுரத்தில் டி.ஜெயக்குமார், மயிலம் தொகுதியில் சி.வி.சண்முகம், மதுரை மேற்கு தொகுதியில் செல்லூர் கே.ராஜு, பாப்பிரெட்டிபட்டி தொகுதியில் கே.பி. அன்பழகன், நன்னிலம் தொகுதியில் ஆர்.காமராஜ், வேதாரண்யம் தொகுதியில் ஓ.எஸ்.மணியன், விராலிமலை தொகுதியில் டாக்டர் சி.விஜயபாஸ்கர், கோவில்பட்டி தொகுதியில் கடம்பூர் ராஜு, திருமங்கலம் தொகுதியில் ஆர். பி.உதயகுமார், சிவகாசி தொகுதியில் கே.டி.ராஜேந்திரபாலாஜி, மதுரவாயல் தொகுதியில் பா.பெஞ்சமின், கலசபாக்கம் தொகுதியில் அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி, திருப்பரங்குன்றம் தொகுதியில் வி.வி.ராஜன் செல்லப்பா, பவானி தொகுதியில் கே.சி.கருப்பண்ணன், ஜோலார்பேட்டை தொகுதியில் கே.சி.வீரமணி, கரூர் தொகுதியில் எம்.ஆர்.விஜயபாஸ்கர், அரியலூர் தொகுதியில் தாமரை எஸ். ராஜேந்திரன் ஆகியோர் போட்டியிட உள்ளனர்.

முதற்கட்ட பட்டியலின்படி முன்னாள் அமைச்சர்கள் 21 பேருக்கு மீண்டும் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. 16 பேர் தற்போது எம்எல்ஏக்களாக உள்ளனர். கே.டி.ராஜேந்திரபாலாஜி 2021 தேர்தலில் ராஜபாளையம் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். இந்தமுறை சிவகாசி தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. மாநிலங்களவை எம்.பி.யாக உள்ள சி.வி.சண்முகம், கடந்த முறை விழுப்புரம் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியுற்றார். இதனால், மயிலம் சட்டமன்ற தொகுதியில் களமிறங்குகிறார். சி.விசண்முகத்தின் எம்.பி பதவிக்காலம் 2028ம் ஆண்டு வரை உள்ளது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி போளூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தற்போது கலசபாக்கம் தொகுதியில் போட்டியிடுகிறார். இந்த 3 மாஜி அமைச்சர்கள் தொகுதி மாறி போட்டியிடுகின்றனர். அதோடு, இந்த பட்டியலில் முக்குலத்தோருக்கு 8 தொகுதிகள், வன்னியர் 5, கவுண்டர் 4, நாயுடு, மீனவர், முதலியார், ஆசாரி, பட்டியல் சமூகம், செட்டியார் ஆகிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு தலா ஒரு தொகுதி என 23 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த பட்டியலில் ஒருவர் கூட பெண்கள் இல்லை. மேலும், நாடார், தேவேந்திர குல வேளாளர், முஸ்லிம்கள் முற்றிலுமாக புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோன்று அதிமுக முன்னாள் பெண் அமைச்சர்கள் வளர்மதி, கோகுல இந்திரா மற்றும் அதிமுக முன்னணி தலைவர் பொள்ளாச்சி ஜெயராமன், செம்மலை, முன்னாள் சபாநாயகர் தனபால் உள்ளிட்டவர்கள் பெயர் முதல் பட்டியலில் இடம் பெறாததால், அவரது ஆதரவாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

## பாஜக போட்டியிடும் தொகுதிகள்

மயிலாப்பூர், தளி, மொடக்குறிச்சி, உதகமண்டலம், அவிநாசி, திருப்பூர் (தெற்கு), கோவை- வடக்கு, கந்தர்வக்கோட்டை, புதுக்கோட்டை, திருப்பத்தூர் (சிவகங்கை), மதுரை தெற்கு, சாத்தூர், திருச்செந்தூர், வாசுதேவநல்லூர், ராதாபுரம், நாகர்கோவில், விளவங்கோடு, திருவண்ணாமலை, தஞ்சாவூர், திருவாரூர், அறந்தாங்கி, மானாமதுரை, ராமநாதபுரம், குளச்சல், பத்மநாபபுரம், ராசிபுரம் ஆகிய 27 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## பாமக போட்டியிடும் தொகுதிகள்

சேலம் மேற்கு, தருமபுரி, பென்னாகரம், விக்கிரவாண்டி, சோளிங்கர், மயிலாடுதுறை, திருப்போரூர், உத்திரமேரூர், ஜெயங்கொண்டம், போளூர், செஞ்சி, விருத்தாசலம், ரிஷிவந்தியம், காட்டுமன்னார்கோவில், கீழ்வேளூர், பெரம்பூர், சேலம் வடக்கு, அம்பத்தூர் ஆகிய 18 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## அமமுக போட்டியிடும் தொகுதிகள்

பெரியகுளம், மன்னார்குடி, திருவையாறு, காரைக்குடி, திருப்பத்தூர் (திருப்பத்தூர் மாவட்டம்), நாங்குநேரி, ஓட்டப்பிடாரம், திருச்சி (மேற்கு), சைதாப்பேட்டை, பூந்தமல்லி, மடத்துக்குளம் ஆகிய 11 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## தமாகா போட்டியிடும் தொகுதிகள்

ஒட்டன்சத்திரம், ஈரோடு (மேற்கு), ராணிப்பேட்டை, கிள்ளியூர், கும்பகோணம்

ஐஜேகே-வுக்கு பல்லாவரம், குன்னம் ஆகிய 2 தொகுதிகள், புரட்சி பாரதம் கட்சிக்கு கே.வி.குப்பம் தொகுதி, ஜான் பாண்டியனின் தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்துக்கு ராஜபாளையம் தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு பழனிசாமி அறிவித்தார்.

## 170 தொகுதியில் வேட்பாளர்கள் இரட்டை இலையில் போட்டி

அதிமுக கூட்டணியில் பாஜவுக்கு 27, பாமக 18, அமமுக 11, தமாகா 5, ஐஜேகே 2, தமமுக 1, புரட்சி பாரதம் 1 தொகுதி என மொத்தம் கூட்டணி கட்சிகளுக்கு 65 இடங்களை அதிமுக ஒதுக்கியுள்ளது. இதில் பாஜ, தமாகா, தமமுக ஆகிய கட்சிகள் தாமரை சின்னத்தில் போட்டியிடுகிறது. பாமக மாம்பழம் சின்னத்திலும், அமமுக குக்கர் சின்னத்திலும், ஐஜேகே தனி சின்னத்திலும் போட்டியிடுகிறது. புரட்சி பாரதம் இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுகிறது. கூட்டணி கட்சிகளுக்கு போக மீதமுள்ள 169 இடத்தில் அதிமுக நேரடியாக களம் காண்கிறது. புரட்சி பாரதத்தையும் சேர்த்தால் 170 இடங்களில் அதிமுக இரட்டை இலை சின்னத்தில் போட்டியிடுவது உறுதியாகியுள்ளது. பாஜவின் தாமரைச் சின்னத்தில் 33 பேர் போட்டியிடுகின்றனர்.

### திமுக அரசை கண்டித்து

# அதிமுக தலைமையில் தே.ஜ. கூட்டணி சார்பில் திண்டுக்கலில் கண்டன ஆர்ப்பாட்டம்

## திண்டுக்கல் சீனிவாசன், நத்தம் விஸ்வநாதன், ராம சீனிவாசன் பங்கேற்பு



விஜய் இரண்டாம் கட்ட வேட்பாளர் ஆலோசனை குறித்த கேள்விக்கு நாங்கள் மேடையில் இருக்கும் பொழுதா? நாங்கள் கிறுக்கன் மாதிரி தெரியாமல் எப்படி பேசுவது. இதுகுறித்து அப்புறமாக பேசிக்கொள்ளலாம். - அதிமுக திண்டுக்கல் சீனிவாசன்

திண்டுக்கல் மணிக்கூண்டு பகுதியில் திமுக அரசை கண்டித்து அதிமுக தலைமையில் தே.ஜ. கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அதிமுக பொருளாளரும், சட்டமன்ற உறுப்பினருமான திண்டுக்கல் சீனிவாசன், நத்தம் விஸ்வநாதன் பாஜக மாநில செயலாளர் ராம சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திண்டுக்கலில் பாஜக மாநில செயலாளர் ராம சீனிவாசன் மற்றும் அதிமுக திண்டுக்கல் சீனிவாசன் ஆகியோர் இணைந்து செய்தியாளர்களை சந்தித்தனர்...

கீழடி அகலாய்வு வந்ததே அதிமுக ஆட்சியில் தான். எடப்பாடி முதலமைச்சராக இருந்தபோது கீழடி அகழ்வாய்வுக்கு ஆணையிட்டதை திமுக ஆட்சி மறைத்துள்ளது. இதற்கான அங்கீகாரம் வழங்க வேண்டும் என்றால் அதிமுகவிற்கு தான் வழங்க வேண்டும். - பாஜக ராம சீனிவாசன்

அதிமுக திண்டுக்கல் சீனிவாசன்

ஆர்ப்பாட்டம் பாஜக ராம சீனிவாசன் தலைமையில் நல்லபடியாக நடந்து முடிந்துள்ளது.

தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 100 / 100 சதவீதம் வெற்றி, எங்களுக்கு தோளுக்கு தோளாக இருக்கின்றனர்.

தேசிய ஜனநாயக கூட்டணியை விட்டு NRI காங்கிரஸ் விலகியது குறித்த கேள்விக்கு

பாஜக ராம சீனிவாசன்

பாண்டிச்சேரி அரசியல் குறித்து தமிழ்நாடு பொதுச் செயலாளராக நான் பேச முடியாது. பாண்டிச்சேரி மாநிலம் சம்பந்தப்பட்ட விஷயம் அதன் தலைவர்கள் இது குறித்து பதிவு செய்வார்கள். இதைப் பற்றி நாங்கள் பேச முடியாது.

பாண்டிச்சேரியில் பாமக தனித்து போட்டியிடுவதாக கூறியது குறித்த கேள்விக்கு

அதிமுக திண்டுக்கல் சீனிவாசன்

எந்த தலைவர் கூறினாரோ அவரிடம் கேளுங்கள்.

பாஜக ராம சீனிவாசன்

தமிழ்நாட்டில் மட்டுமே கூட்டணி. அந்தமான், கர்நாடகா, மகாராஷ்டிரா திமுக உள்ளது. அங்கு காங்கிரஸ் மற்றும் திமுக கூட்டணி வைப்பது இல்லை.

தமிழ்நாட்டில் உள்ள தொடர்பில் தான் தேசிய ஜனநாயக கூட்டணி எடப்பாடி பழனிச்சாமி அவர்களை முதல்வர் ஆக்குவதற்காக அவரது தலைமையில் கூட்டணி உருவாகி

உள்ளது.

த.வெ.க பரிசுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டது குறித்த கேள்விக்கு

அதிமுக திண்டுக்கல் சீனிவாசன்

இதனை அனைத்து செய்திகளிலும் காட்டுங்கள். இது அவர்களின் கட்சி விஷயம் வேற கேள்வி இருந்தால் கேளுங்கள். தயவுசெய்து விஜய் இடம் கேளுங்கள்.

அதிமுகவை அழித்தது எடப்பாடி பழனிச்சாமியும், உதயகுமாரும் என ஓ.பன்னீர்செல்வம் கூறுவது குறித்த கேள்விக்கு

அதிமுக திண்டுக்கல் சீனிவாசன்

எம்ஜிஆர் ஆரம்பித்த அதிமுகவை அளித்தது ஒழித்தது துரோகி ஓபிஎஸ் துரோகி ஓபிஎஸ்

தேசிய ஜனநாயக கூட்டணியில் விஜய் வந்தால் ஏத்துபிங்களா? என்ற கேள்விக்கு

அதிமுக திண்டுக்கல் சீனிவாசன்

இது குறித்து தனியாக தலைவர்கள் கூறுவார்கள்.

பாஜக ராம சீனிவாசன்

தேசிய ஜனநாயக கூட்டணிக்கு விஜய் வந்தால் அது விஜய்க்கு நல்லது.

திமுக ஆட்சியை அகற்ற வேண்டும் என்றால் ஓரணியில் இணைவோம். வாக்குகள் ஒன்றாக வேண்டும் எனக் கூறி வருகிறோம். வருவதும் வராததும் அவரது இஷ்டம். வந்தால் அவருக்கு நல்லது.

அதிமுக திண்டுக்கல் சீனிவாசன்

விஜய் குறித்து பேசுவது பாஜக ராம சீனிவாசன் கருத்து. நான் சொன்னதாக எடுத்துக் கொள்ள வேண்டாம்.

விஜய் இரண்டாம் கட்ட வாக்காளர்கள் ஆலோசனை குறித்த கேள்விக்கு

அதிமுக திண்டுக்கல் சீனிவாசன்

தற்போது மேடையில் இருக்கும் பொழுதா? நாங்கள் கிறுக்கன் மாதிரி தெரியாமல் எப்படி பேசுவது. இதுகுறித்து அப்புறமாக பேசிக்கொள்ளலாம்.

பேரறிஞர் அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் மற்றவர்கள் அப்பாயின்மென்ட்டில் வந்தவர் மற்றவர்கள் என ஓபிஎஸ் கூறியது குறித்த கேள்விக்கு

அதிமுக திண்டுக்கல் சீனிவாசன்

துணை முதல்வராகவும் ஒருங்கிணைப்பாளராகவும் கடவுளால் நியமிக்கப்பட்டாரா ஓபிஎஸ். அவருக்கு சரி என்றால் எங்களுக்கும் சரி.

கீழடியில் 8 இடங்களில் மத்திய அரசு அகழ்வாராய்ச்சி செய்ய அனுமதி அளித்துள்ளது. திமுகவின் விடாமுயற்சி என கூறியது குறித்த கேள்விக்கு

பாஜக ராம சீனிவாசன்

இதற்கு மத்திய அரசை அனுமதி வழங்கி உள்ளது. மத்திய அரசிடம் இருந்து அனுமதி வரும் வரை மத்திய அரசு தடுக்கிறது என கூறினார்கள். மத்திய அரசு ஒப்புதல் அளிக்கும் பொழுது அதனை பாராட்ட வேண்டும் என்ற மனசு திமுகவிடம் இல்லை.

பல போராட்டத்திற்கு பின்பு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது என திமுக கூறியது குறித்த கேள்விக்கு அது அவர்களின் கருத்து.

இந்தியாவில் முதன்மை நாகரீகம் தமிழர் நாகரிகம் என்பதில் பெருமை அடைகிறோம். இது குறித்த முழு விவரங்கள் பிரதமர் மோடி அவர்களுக்கு நன்றாக தெரியும்.

அதற்கான நடவடிக்கைகளை அந்தத் துறை செய்து கொண்டிருக்கிறது. தற்போது இதற்கு ஒப்புதல் கிடைத்துள்ளது. பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நன்றி செலுத்துகிறோம்.

கீழடி அகலாய்வு வந்ததே அதிமுக ஆட்சியில் தான். எடப்பாடி முதலமைச்சராக இருந்தபோது கீழடி அகழ்வாய்வுக்கு ஆணையிட்டதை திமுக ஆட்சி மறைத்துள்ளது. இதற்கான அங்கீகாரம் வழங்க வேண்டும் என்றால் அதிமுகவிற்கு தான் வழங்க வேண்டும்.



# பேருந்துகள் மற்றும் ஆட்டோக்களில் தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஒட்டுவில்லைகளை ஒட்டி கலெக்டர் விழிப்புணர்வு



திண்டுக்கல் மாவட்டம் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026-ஐ முன்னிட்டு, திண்டுக்கல் காமராஜர் பேருந்து நிலையத்தில் பேருந்துகள் மற்றும் ஆட்டோக்களில் தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஒட்டுவில்லைகளை ஒட்டி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026-ஐ முன்னிட்டு, திண்டுக்கல் காமராஜர் பேருந்து நிலையத்தில் இன்று (28.03.2026) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் பேருந்துகள் மற்றும் ஆட்டோக்களில் தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஒட்டுவில்லைகளை ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்தியத் தேர்தல் ஆணையத்தால், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்-2026 நடைபெறுவது குறித்த கால அட்டவணை (Announcement of Election) (15.03.2026)-அன்று வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்றத் தொகுதிகளிலும் 100% தேர்தல் வாக்குப்பதிவை வலியுறுத்தி "நமது வாக்கு, நமது உரிமை", "தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா" மற்றும் "எதிர்காலம் ஏற்றம் பெற வாக்களிப்போம்" என்ற தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் பொறிக்கப்பட்ட விளம்பரப் பதாகைகள் மற்றும் துண்டு பிரசுரங்கள் வாயிலாக வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், இன்றைய தினம் திண்டுக்கல் மாவட்டம், காமராஜர் பேருந்து நிலையத்தில் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் மற்றும் ஆட்டோக்களில் தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஒட்டுவில்லைகளை ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026-ல் வாக்குரிமை வழங்கப்பட்ட வாக்காளர்கள் அனைவரும் தவறாது வாக்களிக்க வேண்டும். "நமது வாக்கு, நமது உரிமை" என்பதை குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்று மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து, திண்டுக்கல் மாவட்டம், காமராஜர் பேருந்து நிலையத்தில் பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்கும், ஆட்டோ ஓட்டுநர்களுக்கும் மற்றும் பயணம் செய்யும் பொதுமக்களுக்கும் வாக்களிப்பதன் அவசியம் குறித்தும், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026-ல் 100% தேர்தல் வாக்குப்பதிவை உறுதி செய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்தும் எடுத்துரைத்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் விழிப்புணர்வு ஏற்படுத்தினார். அதனைத் தொடர்ந்து, பேருந்து ஓட்டுநர்கள் மற்றும் நடத்துனர்களுக்கும், ஆட்டோ ஓட்டுநர்களுக்கும் மற்றும் பயணம் செய்யும் பொதுமக்களுக்கும் "நமது வாக்கு, நமது உரிமை", "தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா" மற்றும் "எதிர்காலம் ஏற்றம் பெற வாக்களிப்போம்" உள்ளிட்ட தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், உதவி ஆட்சியர் (பயிற்சி) ச.வினோதினி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் சா.சதீஸ்பாபு தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக பொது மேலாளர் (திண்டுக்கல் மண்டலம்) முத்துகிருஷ்ணன் வட்டார போக்குவரத்து ஆய்வாளர் சண்முக ஆனந்த் திண்டுக்கல் கிழக்கு வட்டாட்சியர் .பானுலட்சுமி தனி வட்டாட்சியர் (கேபிள் டி.வி) மங்களபாண்டியன் ஆகியோர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**"தேர்தல் திருவிழா**
**தமிழ்நாட்டின் பெருவிழா"**



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026-ஐ முன்னிட்டு, திண்டுக்கல், மதுரை எல்லைப் பகுதியில் உள்ள பரளிபுதூர் சோதனைச் சாவடியை திண்டுக்கல் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், மற்றும் மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் ஆகியோர் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்கள்.அருகில் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்.அ.பிரதீப், மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே.அரவிந்த் உதவி ஆட்சியர் (பயிற்சி) ச.வினோதினி, உதவி தேர்தல் அலுவலர் மற்றும் நத்தம் வட்டாட்சியர் பாண்டியராஜன் உட்பட பலர் உள்ளனர்.




தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026-ஐ முன்னிட்டு, திண்டுக்கல் மாவட்டம், 131-நத்தம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட லாண்டிஸ் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன், பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .அ.பிரதீப், உதவி ஆட்சியர் (பயிற்சி) .ச.வினோதினி, நத்தம் தேர்தல் நடத்தும் அலுவலர் ஜஸ்டீன் சாந்தப்பா, உதவி தேர்தல் அலுவலர் மற்றும் நத்தம் வட்டாட்சியர் திரு.பாண்டியராஜன் உட்பட பலர் உள்ளனர்




அரசியலில் ஆதாயம் தேடு;
அதை உன் அன்பினால், உன்னை நம்பும் மக்களிடம்
நல்லதாக சேர்த்து கொடு.

மக்களின் பணத்தில் அல்ல,
உன் உழைப்பினாலும்
மக்கள் நம்பிக்கையிலும் செயல் படு.

ஊருக்குள் இருக்கும் குளத்தைத் தூர்வாரு;
குளம் இல்லாத ஊரில் குளத்தை உருவாக்கு.
குடிசை வீட்டை கோபுரமாக்கு.

அதை அன்பினால் மக்களிடம்
உன் வாக்கை கேட்டு வாங்கு.

நேர்காணலில் நேர்மையாக இரு;
பாதைகளை சரிவர போடு.

மக்களின் மனம் தெரிந்து போராடு;
"மக்கள் மனமே உன் பாதை" என்று நடைபோடு.

பாடுபடும் மக்களுக்கு பசியாற உணவு போடு;
பாடுபடு நீயும், பசியாற மக்களும்.
பாகுபாடு பாராமல்
உணவை பகிர்ந்து பரிமாறு.

காலம் போடும் கணக்கு,
உன் கண் அசைவிலும் விரல் நுனியிலும்
மக்கள் செலுத்துவார் உனக்கு வாக்கு.

நீ மக்களுக்கு கொடுத்த வாக்கை நிறைவேற்று;
மக்கள் வாக்கு — அதுதான்நீ
செய்த செயலின் நம்பிக்கையின் வெற்றி.

வென்றுவிடும் மக்களின் நல்லாட்சி;
மக்களின் தீர்ப்பே அது —
மகேஸ்வரனின் தீர்ப்பு.

இந்தத் தேர்தலில்
அனைவரும் தவறாமல் வாக்களிப்போம்;
வாங்க, வாக்களிப்போம்!

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107. Phone: 9444842105

**ஜனநாயகத்தைக் காக்க**
**வாக்களிப்போம்!**

# ஆலயத்தம்மா பெரியபாளையத்தம்மா



ஆன்மிகம்

பெரியபாளையத்தம்மா, நீதானம்மா
எங்களுக்கு துணையும் நீதானம்மா.
பெரிய மனசுக்காரி நீதானம்மா.
உன் பெயரிலே மாறி மாறி மாதம் மும்மாரி
பெய்யும் மழையும் உன்னால்தானம்மா.
நனையும் பூமியும் நனையுதம்மா,
மாறி மாறி பொழியும் மழையும் நீதானம்மா.

விளையும் பயிர்கள் எல்லாம் நல்லா விளையணும் அம்மா.
வான்மழை போல் வரும் தேன் கவிதைகளையும்
நீ தருவாய் அம்மா.
செந்தமிழால் சொற்கள் சொல்லி
உன்னைப் பாடும் புலவர்களும் உண்டு;
அதைக் கேட்டு வாழும் பக்தர்கள்தான் நாங்கள் அம்மா.

பெரியபாளையத்தம்மா, இன்னும் உன் அருளால்
நாங்களும் பாடி மகிழ்வோம் உன்னைத்தானம்மா.
வான்புகழ் போல் வாழ்வில் வளம் சேர்ப்பவளும் நீதானம்மா.

ஆலயம் எங்கும் ஆதிசக்தி ஆனவளும் நீதானம்மா.
பிறவிகள் பல உனக்குத்தானம்மா,
பெயர்தான் பெரியபாளையத்தம்மா.

எங்களையும், பக்தர்களையும், ஊர் மக்களையும்
காத்து அருள் புரிபவளும் நீதானம்மா.
பெரியபாளையத்தம்மா, பெரிய மனசுக்காரி நீதானம்மா.

வேப்பிலையே விரும்புபவளும் நீதானம்மா,
பெரியபாளையத்தம்மா.
வேண்டிய வரங்களையும் தருபவளும்
நீங்கள்தான் அம்மா.

வீதியெங்கும் வீதி உலா வந்து
ஊர் மக்களையும், உன்னை எண்ணி
வாழும் பக்தர்களையும்
ஒரு இமைப்பொழுதில் காத்து
அருள்வாய்
பெரியபாளையத்தம்மா.

உன் பெயர் போல் பெரிய
மனசுக்காரிதானம்மா
பெரியபாளையத்தம்மா.
எங்களையும் எல்லோரையும் காத்து
அருள்வாய் அம்மா.

பெரியபாளையத்தம்மா,
பெரியபாளையத்தம்மனை
போற்றி போற்றி போற்றி
வணங்கி வாழ்வோம்.

அனைவரையும் அருள் மழையாய்
காத்து அருள்தாயே
பெரியபாளையத்தம்மா.

**ராமகிருஷ்ணன்**
26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107. Phone: 9444842105

# இனி நாம் எல்லாம் ஹீரோ தான்.....

கதை ஆசிரியர்: ராமகிருஷ்ணன்




அருகில் இருந்தவர்களும் சொன்னார்கள். தங்கம்மாள் கடைக்காரரிடம்,

"ஐயா, எந்த ஆஸ்பத்திரி ஐயா? எனக்கு தெரியலையே! நானும் போய் பார்க்கணுமே. என்ன ஆச்சோ, ஏதாச்சோ..." என்று தவித்தாள் ராமசாமியின் மனைவி தங்கம்மாள்.

அதற்குள் பண்ணையார் வீட்டுக்கு போய் திரும்பிக் கொண்டிருந்த ஊர்க்காரர்கள் அந்த பஸ் ஸ்டாண்டுக்கு வந்து விட்டார்கள். அவர்களைப் பார்த்து,

"அண்ணே, எங்க வீட்டுக்காரருக்கு என்ன அண்ணே? என்னன்னே ஆச்சு? எந்த ஆஸ்பத்திரி போயிருக்காங்க? கொஞ்சம் சொல்லுங்களே அண்ணே!" என்றாள் ராமசாமியின் மனைவி தங்கம்மாள்.

அதில் ஒருவர் சொன்னார்:

"ஒன்னும் பயப்படாதம்மா. கால், கையில தான் கொஞ்சம் அடிபட்டு இருக்கு. அதனால ஜெயங்கொண்டம் ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போயிருக்காங்கம்மா," என்றார்.

அதற்கு தங்கம்மாள்,

"நானும் போகணுமே! எந்த பஸ் வருதுன்னு தெரியலையே," என்றாள்.

அங்கு இருந்த ஊர்க்காரர்கள் சொன்னார்கள்:

"தங்கம்மா, நாங்களும் எல்லாம் ஆஸ்பத்திரிக்கு வந்து ராமசாமியையும் பக்ரியையும் பார்க்கணும். பஸ் இப்ப வந்துரும்."

அவர்கள் வாய் மூடி திறக்கும் முன்னே ஹாரன் அடித்து அந்த ரூட்டுக்கான பஸ் வந்தது. சோழபுரம்



புதையூர் பஸ் ஸ்டாப்பில் நின்றது.

உடனே ஊர்க்காரர்கள் தங்கம்மாவிடம்,

“இந்தப் பேருந்து ஜெயங்கொண்டத்துக்குத்தான் போகுது. வாமா, போலாம்,” என்றார்கள்.

தங்கம்மாள் ஒன்றும் சொல்லாமல் பஸ் படிக்கட்டில் கால் வைத்தவுடன், தன் கணவனின் கவலை நினைத்து பயணிகள் இருக்கையில் போய் முதல் ஆளாக உட்கார்ந்தாள்.

அதற்குப் பின்னால் அந்த பேருந்தில் ஊர்க்காரர்களும் சில பயணிகளும் சீட்டுகளில் உட்கார்ந்தார்கள்.



கண்டக்டர் “போட் ரைட்” என்று விசில் அடித்தார். பேருந்து அங்கிருந்து கிளம்பியது.

கண்டக்டர் பயணிகளிடம்,

“டிக்கெட், டிக்கெட்! எங்க போனும்?” என்று கேட்டார்.

ஒவ்வொருவரும் அவர்கள் போகும் இடத்தை சொல்லி டிக்கெட் வாங்கிக் கொண்டிருந்தார்கள். அதுபோல் சோழபுரம் புதையூரில் இருந்து ஏறியவர்களும் டிக்கெட் எடுத்தார்கள். அதில் ராமசாமியின் மனைவி தங்கம்மாளும், ஊர்க்காரர்களும் இருந்தார்கள்.

ஜெயங்கொண்டத்துக்கு போகும் வழியில் சிறிது தூரம் சென்றதும் அடுத்த ஸ்டாப்பில் பேருந்து நின்றது.

தங்கம்மாள் கேட்டாள்:

“அண்ணே, எங்க வீட்டுக்காரர் சேர்த்திருக்கிற ஆஸ்பத்திரி வந்துட்டானே? இங்கே இறங்கணுமா?”

ஊர்க்காரர்கள் சொன்னார்கள்:

“இல்ல தங்கம்மா, இன்னும் இரண்டு ஸ்டாப் போகணும்.”

“சரி அண்ணே, இன்னும் இரண்டு ஸ்டாப் போனதும் மூன்றாவது ஸ்டாப்பில இறங்கணுமா? முதல்ல எங்க வீட்டுக்காரரை பார்த்தால்தான் மனசு நிம்மதியா இருக்கும் அண்ணே…” என்று மன வருத்தத்துடன் சொன்னாள்.

அடுத்த பஸ் ஸ்டாப்பிலும் பயணிகள் ஏறி இறங்கினார்கள். ஆனால் தங்கம்மாளின் மனம் பதட்டமாக இருந்தது — “இந்த ஸ்டாப்பா?” என்று.

அப்போது அருகில் இருந்த இன்னொரு பெண் கேட்டாள்:

“எங்கம்மா போகணும்? என்னம்மா ஆச்சு? ரொம்ப கவலையா பேசுறியே!”

அதற்கு தங்கம்மாள்,

“எங்க வீட்டுக்காரருக்கு கை, கால் அடிபட்டு ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போயிருக்காங்க. அதான் கவலையா இருக்கு. ஜெயங்கொண்டம் எங்க இருக்குன்னு தெரியலையே,” என்றாள்.

அதற்கு அந்த பெண் ஆறுதல் கூறி,

“அடுத்த ஸ்டாப் மீன்சுருட்டி. அதுக்கு அடுத்த ஸ்டாப்பில நீ இறங்கலாம். அங்கதான் ஜெயங்கொண்டம் ஆஸ்பத்திரி இருக்கு. நீ ஒன்னும் பயப்படாதே. உன் கணவருக்கு ஒன்னும் ஆகாது,” என்றாள்.

“சரி மா…” என்று தலையசைத்தாள் தங்கம்மாள்.

“மீன்சுருட்டி ஸ்டாப் வந்துருச்சு! இறங்குறவங்க இறங்குங்க!” என்று கண்டக்டர் கூறினார்.

அடுத்த ஸ்டாப்பில் தங்கம்மாள் இறங்கி,

“எந்த ஆஸ்பத்திரியில் எங்க இருக்கார்?” என்று தேடிக்கொண்டே ஓடினாள்.

அதே நேரத்தில் பேருந்து சென்று கொண்டிருக்கும்போது, முன்னால் நடு ரோட்டில் சிலர் கையை அசைத்து பேருந்தை நிறுத்தச் செய்தார்கள்.

பேருந்து ஓட்டுநர் அதை பார்த்து வண்டியை ஓரமாக நிறுத்தினார்.

அவர்கள் அலறிக்கொண்டே,

“ஐயோ! காப்பாத்துங்க! பாம்பு கடிச்சு! சீக்கிரம் ஆஸ்பத்திரிக்கு போகணும்!” என்று கூச்சலிட்டார்கள்.

கண்டக்டர் கேட்டார்:

“என்னாச்சு? ஏன் இப்படி சத்தம் போடுறீங்க?”

அவர்கள் சொன்னார்கள்:

“இவங்களை பாம்பு கடிச்சுடுச்சு ஐயா! ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு போனும்!”

அதற்கு கண்டக்டர்,

“இந்தப் பேருந்து ஜெயங்கொண்டம், அப்படியே கும்பகோணம் போயிடும். நீங்க சிதம்பரத்துக்கு போங்க. அங்க ஆஸ்பத்திரி இருக்கு. சீக்கிரமா போங்க!” என்றார்.

அவர்கள் இன்னும் அழுது கொண்டு,

“இந்த ரோட்ல வேற ஆஸ்பத்திரி இல்லையா ஐயா?” என்று கேட்டார்கள்.

“கும்பகோணம் போனா லேட்டாயிடும். சிதம்பரம் போங்க,” என்று கூறி அவர்களை இறங்கச் செய்தார் கண்டக்டர்.

அவர்கள் அழுதுக்கொண்டே அந்தப் பக்கம் செல்லும் பஸ் ஸ்டாப்புக்கு சென்றார்கள்.

பேருந்து அங்கிருந்து கிளம்பி சிறிது நேரத்தில் ஜெயங்கொண்டம் பஸ் ஸ்டாப்பை அடைந்தது.

*(தொடரும்…)*


**ராமகிருஷ்ணன்**

26/1 Raja Street, Bharathiyar Nagar,
Koyambedu Market Road,
Chennai - 600 107. Phone: 9444842105

# சான்றோர் குரல்

**சந்தா விபரம்:**

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | ரூ.300 |
| 5 ஆண்டு சந்தா | ரூ.1,500 |
| ஆயுள் சந்தா | ரூ.5,000 |

**வங்கி விபரம்:**

A/C HOLDER:
G.B.PACHAIYAPPAN
BANK: ICICI BANK
A/C NO: 021201596561
BRANCH: CHENNAI, SANTHOM
IFSC CODE: ICIC0000212

**விளம்பர கட்டணம்**

| | |
|---|---|
| கலர் முழு பக்கம் | ரூ. 7,000.00 |
| 2-ம் பக்கம் (கலர்) | ரூ. 7,500.00 |
| பின்பக்க அட்டை (கலர்) | ரூ. 10,000.00 |
| பின்பக்க முன் அட்டை (கலர்) | ரூ. 7,500.00 |
| முழு பக்கம் (B/W) | ரூ. 3,000.00 |
| 1/2 பக்கம் (B/W) | ரூ. 1,500.00 |

**Contact No: 99622 35002**

Saandrorkural / சான்றோர் குரல்
Subscribe செய்யுங்கள்...

Saandrorkural  saandrorkural@gmail.com  Saandrorkural

*தினசரி செய்திகள்... உடனடி செய்திகளுக்கு...*

## சான்றோர் குரல் மல்டி மீடியா-வின் சான்றோர் குரல் நியூஸ் யூடியூப் சேனல்

SAANDROR KURAL NEWS

SUBSCRIBE LIKE COMMENT SHARE

# தேர்தல் பிரச்சாரம் செய்வாரா?

## - ரஜினிகாந்த் பதில்



நடிகர் ரஜினிகாந்த், ஜெயிலர்-2 திரைப்படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்துக்கான பணிகளில் கலந்து கொள்வதற்காக, நேற்று மதியம் சென்னையில் இருந்து விமானம் மூலம் ஹைதராபாத் சென்றார். முன்னதாக, சென்னை விமான நிலையத்தில் ரஜினிகாந்த் செய்தியாளர்களிடம் கூறுகையில், "ஜெயிலர்-2 படத்தின் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது. படம் வெளியாகும் தேதி குறித்து விரைவில் அறிவிப்பார்கள். நானும், கமலும் இணைந்து நடிக்கும் படம் ஆகஸ்ட் மாதம் தொடங்குகிறது" என்றார். அப்போது, தேர்தல் நெருங்கி வருகிறது. மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, வணக்கம் என்று கையெடுத்து கும்பிட்டார். தொடர்ந்து, நீங்கள் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட வாய்ப்புள்ளதா என்ற கேள்விக்கும், சிரித்து கொண்டே, 'நோ கமெண்ட்ஸ்' என்று ரஜினிகாந்த் தெரிவித்தார்.

# நம்பிக்கை என்னும் கைப்பிடி

மனம் அலையுது கடல் அலையைப் போல  
கடல் நடுவில் தூண் இல்லை பிடித்து  
களைப்பாற  
விழி பார்வையில் எதுவும் இல்லை  
நீந்தி கரை சேர  
கடலுக்கு கரையேது  
மனதுக்குள் நம்பிக்கை என்னும் கைப்பிடி  
இருந்தால் கடலைக் கடக்கலாம்  
மனதில் தைரியம் என்னும் கைத்தடி  
இருந்தால் கடலை அளக்கலாம்

**ராமகிருஷ்ணன்**  
26/1 Raja Street, Bharathiyar Nagar,  
Koyambedu Market Road,  
Chennai - 600 107.  
Phone: 9444842105



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026-ஐ முன்னிட்டு, திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நத்தம் சட்டமன்ற தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள்(EVMs) மற்றும் வாக்குப்பதிவு சரிபார்க்கும் இயந்திரங்கள்(VVPATs) ஆகியவற்றை வைப்பறையில் வைக்கும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன். பார்வையிட்டு ஆய்வு செய்தார். அருகில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.அ.பிரதீப், உதவி ஆட்சியர் (பயிற்சி) மரு.ச.வினோதினி. நத்தம் தேர்தல் நடத்தும் அலுவலர் ஜஸ்டீன் சாந்தப்பா, உதவி தேர்தல் அலுவலர் மற்றும் நத்தம் வட்டாட்சியர் பாண்டியராஜன் உட்பட பலர் உள்ளனர்.

## சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிடும்

# 2-ம் கட்ட 127 வேட்பாளர்கள் பட்டியல்

### கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ளார்

சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிடும் 2-ம் கட்ட வேட்பாளர்கள் பட்டியலை அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ளார். அதில், 127 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்.23-ஆம் தேதி நடைபெறவிருக்கும் நிலையில், அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாஜக 27 தொகுதிகளில், பாமக 18 தொகுதிகளிலும், அமமுக 11 தொகுதிகளிலும், தமாகா 5 தொகுதிகளும் போட்டியிடுகின்றன.

அதிமுகவின் சார்பில் ஏற்கெனவே 23 பேர் கொண்ட முதற்கட்ட வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ள நிலையில், தற்போது 127 தொகுதிகள் அடங்கிய 2-ம் கட்ட வேட்பாளர்களின் பட்டியலை அக்கட்சியில் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார். அதன் விவரம்:

1. கும்மிடிபூண்டி (1) - V. சுதாகர்
2. பொன்னேரி (தனி) (2) - சிறுணியம் P. பலராமன்
3. திருத்தணி (3) - திருத்தணி கோ. அரி
4. திருவள்ளூர் (4) - B.V. ரமணா
5. மாதவரம் (9) - மாதவரம் V. மூர்த்தி
6. திருவொற்றியூர் (10) - K. குப்பன்
7. ஸ்ரீபெரும்புதூர் (தனி) (29) - K. பழனி
8. தாம்பரம் (31) - சிட்லபாக்கம் ச. இராசேந்திரன்
9. செங்கல்பட்டு (32) - M. கஜா (எ) கஜேந்திரன்
10. செய்யூர் (தனி) (34) - E. ராஜசேகர்
11. மதுராந்தகம் (தனி) (35) - மரகதம் குமரவேல்
12. காஞ்சிபுரம் (37) - V. சோமசுந்தரம்
13. அரக்கோணம் (தனி) (38) - சு. ரவி
14. காட்பாடி (40) - V. ராமு
15. ஆற்காடு (42) - S.M சுகுமார்
16. வேலூர் (43) - S.R.K அப்பு
17. அணைக்கட்டு (44) - த. வேலழகன்
18. குடியாத்தம் (தனி) (46) - G. பரிதா புருஷோத்தமன்
19. வாணியம்பாடி (47) - G. செந்தில்குமார்
20. ஆம்பூர் (48) - R. வெங்கடேசன்
21. ஊத்தங்கரை (தனி) (51) - T.M. தமிழ்செல்வம்
22. பர்கூர் (52) - E.C. கோவிந்தராசன்
23. கிருஷ்ணகிரி (53) - K. அசோக்குமார்
24. ஓசூர் (55) - P. பாலகிருஷ்ண ரெட்டி
25. பாப்பிரெட்டிபட்டி (60) - மரகதம் வெற்றிவேல்
26. அரூர் (தனி) (61) - V. சம்பத்குமார்
27. செங்கம் (தனி) (62) - T.S. வேலு
28. கீழ்பென்னாத்தூர் (64) - எஸ். இராமச்சந்திரன்



29. ஆரணி (67) - L. ஜெயசுதா
30. செய்யார் (68) - முக்கூர் N. சுப்பிரமணியன்
31. வந்தவாசி (தனி) (69) - P. ராணி
32. திண்டிவனம் (தனி) (72) - P. அர்ஜூனன்
33. வானூர் (தனி) (73) - P. முருகன்
34. விழுப்புரம் (74) - K. விஜயா
35. திருக்கோயிலூர் (76) - S. பழனிசாமி
36. உளுந்தூர்பேட்டை (77) - இரா. குமரகுரு
37. சங்கராபுரம் (79) - R. ராகேஷ்
38. கள்ளக்குறிச்சி (தனி) (80) - ராஜீவ்காந்தி
39. கங்கவல்லி (தனி) (81) - A. நல்லதம்பி
40. ஆத்தூர் (தனி) (82) - A.P. ஜெயசங்கரன்
41. ஏற்காடு (எஸ்டி) (83) - P. உஷாராணி
42. ஓமலூர் (84) - R. மணி
43. மேட்டூர் (85) - G. வெங்கடாஜலம்
44. சங்ககிரி (87) - S. வெற்றிவேல்
45. சேலம் (தெற்கு) (90) - J. வினோத்
46. வீரபாண்டி (91) - டாக்டர் ஸ்ரீ பாலாஜி சுகுமார்
47. சேந்தமங்கலம் (எஸ்டி) (93) - C. சந்திரசேகரன்
48. நாமக்கல் (94) - ஸ்ரீதேவி P.S. மோகன்
49. பரமத்தி வேலூர் (95) - S.சேகர்
50. திருச்செங்கோடு (96) - R. சந்திரசேகர்
51. ஈரோடு (கிழக்கு) (98) - R. மனோகரன்
52. தாராபுரம் (தனி) (101) - P. சத்தியபாமா
53. காங்கயம் (102) - N.S.N. நடராஜ்
54. பெருந்துறை (103) - J.K (எ) S. ஜெயக்குமார்
55. அந்தியூர் (105) - P. ஹரிபாஸ்கர்
56. கோபிச்செட்டிப்பாளையம் (106) - V.B. பிரபு
57. பவானிசாகர் (தனி) (107) - A. பண்ணாரி
58. கூடலூர் (தனி) (109) - பொன். ஜெயசீலன்
59. குன்னூர் (110) -A. ராமு

# 2021ல் தோற்ற தொகுதிகளை வாங்காமல் நழுவிய பாஜ

2021ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் அதிமுக கூட்டணியில் இடம்பெற்ற பாஜவுக்கு 20 இடங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டது. அதன்படி ஆயிரம்விளக்கு, கன்னியாகுமரி, தளி, உதகமண்டலம், கோவை மேற்கு, மதுரை வடக்கு, குளச்சல், விளவங்கோடு, திருவையாறு, நாகர்கோவில், மானாமதுரை (தனி), கிணத்துக்கடவு, திருப்பூர் வடக்கு, தாராபுரம் (தனி), தொண்டாமுத்தூர், சிங்கநல்லூர், காவேரிப்பட்டினம், நாகப்பட்டினம், நெல்லை, பரமக்குடி (தனி) ஆகிய 20 தொகுதிகளில் பாஜ போட்டியிட்டு 4 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றது.

தற்போது 2026ம் ஆண்டு தேர்தலில் பாஜவுக்கு 27 இடங்கள் வழங்கப்பட்டுள்ளது. இதில் கடந்தமுறை போட்டியிட்ட 20 தொகுதிகளில், தோல்வியடைந்த 14 இடங்களை பாஜ இந்தமுறை அதிமுகவிடம் இருந்து பெறவில்லை. 2021ல் அதிமுக அதிக வாக்குகள் பெற்று 2வது இடம் பிடித்த 21 இடங்களை தற்போது பாஜ மிரட்டி வாங்கியுள்ளதாக கூறப்படுகிறது. அதேநேரம், கடந்த தேர்தலில் அதிமுக கூட்டணியில் நின்று வெற்றிபெற்ற திருநெல்வேலி (நயினார் நாகேந்திரன்), கோவை தெற்கு (வானதி சீனிவாசன்) ஆகியோர் தற்போது அந்த தொகுதிகளில் நின்றால் தோல்வி அடைந்து விடுவோம் என்பதால், அதை அதிமுகவிடமே கொடுத்துவிட்டு புதிய தொகுதிகளை கேட்டு பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த பேரம் அனைத்தும் பாஜ டெல்லி தலைவர் அமித்ஷா முன்னிலையிலேயே நடந்ததுள்ளதாகவும், இதனால்தான் அமித்ஷா - எடப்பாடி ஆகியோர் பல கட்டங்களாக டெல்லியில் பேசியதாகவும் கூறப்படுகிறது. அதேபோன்று, அதிமுக தற்போது வெற்றிபெற்று எம்எல்ஏவாக உள்ள கோவை வடக்கு (அம்மன் கே.அர்ஜுனன்), முன்னாள் அதிமுக சபாநாயகர் தனபால் போட்டியிட்டு வெற்றிபெற்ற அவினாசி (தனி) ஆகிய 2 தொகுதிகளை பாஜவுக்கு தாரைவார்த்துள்ளது. அவினாசி தொகுதியில் ஒன்றிய இணை அமைச்சர் எல்.முருகன் போட்டியிடுவார் என்று கூறப்படுகிறது.

60. மேட்டுப்பாளையம் (111) - O.K. சின்னராஜ்
61. திருப்பூர் (வடக்கு) (113) - M.S.M. ஆனந்தன்
62. பல்லடம் (115) - பல்லடம் K.P. பரமசிவம்
63. சூலூர் (116) - V.P. கந்தசாமி
64. கவுண்டம்பாளையம் (117) - P.R.S. அருண்குமார்
65. கோயம்புத்தூர் தெற்கு (120) - அம்மன் K. அர்ச்சுணன்
66. சிங்காநல்லூர் (121) - K.R. ஜெயராம்
67. கிணத்துக்கடவு (122) - செ. தாமோதரன்
68. பொள்ளாச்சி (123) - V. பொள்ளாச்சி ஜெயராமன்
69. வால்பாறை (தனி) (124) - D. லட்சுமண சிங்
70. உடுமலைப்பேட்டை (125) - உடுமலை K. ராதாகிருஷ்ணன்
71. பழனி (127) - K. ரவி மனோகரன்
72. ஆத்தூர் (129) - A. விஸ்வநாதன்
73. நிலக்கோட்டை (தனி) (130) - S. தேன்மொழி
74. வேடசந்தூர் (133) - V.P.B. பரமசிவம்
75. அரவக்குறிச்சி (134) - K. செல்வக்குமார்
76. கிருஷ்ணராயபுரம் (தனி) (136) - S. திவ்யா
77. குளித்தலை (137) - S. கருணாகரன்
78. மணப்பாறை (138) - P.L. விஜயகுமார்
79. ஸ்ரீரங்கம் (139) - R. மனோகரன்
80. திருச்சிராப்பள்ளி (கிழக்கு) (141) - க. ராஜசேகரன்
81. திருவெறும்பூர் (142) - ப. குமார்
82. லால்குடி (143) -M. லீமா ரோஸ்
83. முசிறி (145) - N. யோகநாதன்
84. துறையூர் (தனி) (146) - இ. சுரோஜா
85. பெரம்பலூர் (தனி) (147) - இளம்பை இரா. தமிழ்ச்செல்வன்
86. நெய்வேலி (153) - சொரத்தூர் இரா. ராஜேந்திரன்
87. பண்ருட்டி (154) - K. மோகன்
88. கடலூர் (155) - M.C. சம்பத்
89. குறிஞ்சிப்பாடி (156) - A. புவனேந்திரன்
90. புவனகிரி (157) - ஆ. அருண்மொழிதேவன்
91. சிதம்பரம் (158) - K.A. பாண்டியன்
92. சீர்காழி (தனி) (160) - ம. சக்தி
93. பூம்புகார் (162) - S. பவுன்ராஜ்
94. நாகப்பட்டினம் (163) - தங்க. கதிரவன்
95. திருத்துறைப்பூண்டி (தனி) (166) - உ. பாலதண்டாயுதம்
96. திருவிடைமருதூர் (தனி) (170) - இளமதி சுப்ரமணியன்
97. பாபநாசம் (172) - D. சண்முகபிரபு
98. ஒரத்தநாடு (175) - M. சேகர்
99. பட்டுக்கோட்டை (176) - C.V. சேகர்
100. பேராவூரணி (177) - கோவி. இளங்கோ
101. திருமயம் (181) - P.K. வைரமுத்து
102. சிவகங்கை (186) - P.R. செந்தில்நாதன்
103. மேலூர் (188) - P. பெரியபுள்ளான் (எ) செல்வம்
104. மதுரை கிழக்கு (189) - மாங்குளம் K. மகேந்திரன்
105. சோழவந்தான் (தனி) (190) - கி. மாணிக்கம்
106. மதுரை வடக்கு (191) - P. சரவணன்
107. உசிலம்பட்டி (197) - I. மகேந்திரன்
108. ஆண்டிபட்டி (198) - A. லோகிராஜன்
109. போடிநாயக்கனூர் (200) - V.T. நாராயணசாமி
110. கம்பம் (201) - S.T.K. ஜக்கையன்
111. ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி) (203) - M. சந்திரபிரபா
112. விருதுநகர் (206) - V.G. கணேசன்
113. அருப்புக்கோட்டை (207) -S. சேதுபதி
114. பரமக்குடி (தனி) (209) - S. முத்தையா
115. திருவாடானை (210) - கீர்த்திகா முனியசாமி
116. முதுகுளத்தூர் (212) - மலேசியா S. பாண்டி
117. விளாத்திகுளம் (213) - R.சத்யா
118. தூத்துக்குடி (214) - சி.த. செல்லப்பாண்டியன்
119. ஸ்ரீவைகுண்டம் (216) - S.P. சண்முகநாதன்
120. சங்கரன்கோவில் (தனி) (219) - திலிபன் ஜெய்சங்கர்
121. கடையநல்லூர் (221) - C. கிருஷ்ணமுரளி
122. தென்காசி (222) - S. செல்வமோகன்தாஸ்
123. ஆலங்குளம் (223) - K.R.P. பிரபாகரன்
124. திருநெல்வேலி (224) - தச்சை N. கணேசராஜா
125. அம்பாசமுத்திரம் (225) - இசக்கி சுப்பையா (எ) இ. சுப்பையா
126. பாளையங்கோட்டை (226) - S. சையது சுல்தான் சம்சுதீன்
127. கன்னியாகுமரி (229) - என். தளவாய்சுந்தரம்

# தமிழ்நாட்டின் எதிர்காலத்தை காப்பாற்ற என்டிஏ கூட்டணியை வேரோடு வீழ்த்த வேண்டும்

## திருவாரூரில் பிரசாரத்தை தொடங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் பரபரப்பு பேச்சு



தமிழ்நாட்டின் எதிர்காலத்தை காப்பாற்ற என்டிஏ கூட்டணியை வேரோடு வீழ்த்த வேண்டும் என்று திருவாரூரில் பிரசாரக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசினார். தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் ஏப்.23ம் தேதி நடக்கிறது. இதற்கான வேட்பு மனு தாக்கல் நேற்று முன்தினம் தொடங்கியது. முதல் நாளே முதல்வர் மு.க.ஸ்டாலின் கொளத்தூர் தொகுதியில் வேட்பு மனு தாக்கல் செய்துவிட்டு பிரசாரத்தை தொடங்கினார். இதையடுத்து, தமிழ்நாடு முழுவதும் பிரசாரம் மேற்கொள்ளும் வகையில் திருவாரூரில் பிரசாரத்தை தொடங்கினார். திருவாரூர் தெற்கு ரதவீதியில் நேற்று மாலை திருவாரூர் திமுக வேட்பாளர் பூண்டி கலைவாணன், மன்னார்குடி திமுக வேட்பாளர் டிஆர்பி ராஜா, திருத்துறைப்பூண்டி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் மாரிமுத்து, நன்னிலம் வேட்பாளர் எஸ்டிபிஐ முகமது முபாரக் ஆகியோரை ஆதரித்து முதல்வர் தேர்தல் பிரசாரம் செய்தார்.

அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: 2026 சட்டமன்ற தேர்தலின் 'சூப்பர் ஸ்டாராக' விளங்கிக் கொண்டிருக்கும் தேர்தல் அறிக்கையை அண்ணா அறிவாலயத்தின் கலைஞர் அரங்கத்தில் வெளியிட்டேன். நேற்று, தலைவர் கலைஞர் அவர்கள் வாழ்ந்த கோபாலபுரம் இல்லத்தில் இருந்து புறப்பட்டு, கொளத்தூர் தொகுதியில் என்னுடைய வேட்புமனுவைத் தாக்கல் செய்தேன். இன்று, தலைவர் கலைஞரை வளர்த்தெடுத்த திருவாரூர் மண்ணிலிருந்து, திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைமையில் அமைந்திருக்கும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றிக்கான பிரசாரத்தை, பரப்புரையை தொடங்குகிறேன். திருவாரூர் என்றால் அது திமுக ஊர். அதனால் நான் இங்கிருந்து தொடங்குகிறேன்.

நான் உங்கள் வீட்டு பிள்ளை. நான் இந்த மண்ணின் மைந்தன். இன்னும் சொன்னால், தலைவர் கலைஞரின் மகன். உங்களால் உருவாக்கப்பட்ட இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்... அன்போடும், உரிமையோடும் கேட்கிறேன்... வெற்றி உறுதியா இந்த நான்கு பேருக்கும் நீங்கள் தரப்போவது வெற்றி! அது உறுதியா? (உறுதி- மக்கள்). வெற்றி உறுதியாகிவிட்டது. வேட்பாளர்கள் இருக்கையில் அமரலாம். இப்போது நீங்கள் சொன்ன உறுதிபோன்றே, நேற்று மாலை, கொள்கை உறவாக நம்முடன் இணைந்திருக்கும் கூட்டணி கட்சித்தலைவர்கள் அனைவரையும் அண்ணா அறிவாலயத்திற்கு அழைத்து, அவர்களுடன் கலந்து பேசி, 'வெல்வோம் ஒன்றாக' என்று உறுதி எடுத்திருக்கிறோம். அதை முடித்துவிட்டுதான் திருவாரூருக்கு வந்திருக்கிறேன்.

சற்றேறக்குறைய 22 ஆண்டுகளாக, அரசு ஊழியர்கள் போராடி கொண்டிருந்த கோரிக்கையான தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை உருவாக்கி செயல்படுத்தியிருக்கிறோம். இப்படி அனைத்து வகையிலும் தமிழ்நாடு டாப்பில் இன்றைக்கு வந்திருக்கிறது. இது, பாஜ தலைமையில் செயல்பட்டு கொண்டிருக்கும் அதிமுக உள்ளிட்ட அடிமை கட்சிகளுக்கு எல்லாம் எரிச்சலை உண்டாக்கியிருக்கிறது. அதனால், தமிழ்நாட்டை எப்படியாவது கலவர பூமியாக்கிவிடலாம் என்று திட்டமிட்டு, ஏராளமான போலி செய்திகளை தொடர்ந்து பரப்பி பார்த்தார்கள். கலவர வெறியுடன் திரிந்த அவர்களுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியிருக்கிறது. அவர்கள் பரப்பியது அனைத்துமே அவதூறுதான் என்று உண்மை வெளிப்பட்டு, இன்றைக்கு மக்கள் முன்னால் அசிங்கப்பட்டு நிற்கிறார்கள்.

தமிழ்நாடு இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது, அந்த பெருமிதத்தோடும் தமிழ்நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கான திட்டங்களோடும்தான். நான் வெளியிட்ட இந்தத் தேர்தல்

அறிக்கைக்கு ‘சூப்பர் ஸ்டார்’ என்று பெயர் சூட்டியிருக்கிறோம்! அந்தத் தேர்தல் அறிக்கையை நீங்கள் எல்லாம் தொலைக்காட்சியில், பத்திரிகைகளில் பார்த்தீர்களா… அதெல்லாம் வாக்குறுதிகள் மட்டுமல்ல. திராவிட மாடல் 2.0-வில் நிச்சயம் நிறைவேற்றப்படவுள்ள திட்டங்கள். பட்டியல் பெரிதாக இருக்கிறது.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, ஒரு மாபெரும் தொலைநோக்கு திட்டம் அறிவித்திருக்கிறேன். டெல்டா மாவட்டங்களுக்கான சிறப்பு வளர்ச்சித் திட்டம், உறுதியாக சொல்கிறேன்… அடுத்த 5 ஆண்டுகளில் டெல்டா பகுதிகளுக்கான உட்கட்டமைப்பு மாறப்போகிறது. இவ்வாறு, தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளும் வளர்ச்சியை காண்பதற்காக அடுத்த 5 ஆண்டிற்குள் 20 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப் போகிறோம். இவ்வளவு நேரம் சொன்னதெல்லாம், கொஞ்சம்தான்! தேர்தல் அறிக்கை புத்தகத்தில் இன்னும் ஏராளமாக இருக்கிறது.

நான் கலைஞரின் மகன், சொன்னால், சொன்னதை நிச்சயம் செய்வேன்! அதுமட்டுமல்ல, சொல்லாததையும் அதிரடியாக செய்வேன்! இது உங்களுக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டிற்கு எதிராக இருக்கும் என்டிஏ கூட்டணிக்கும் தெரியும். 2011ல் இருந்து, 2021 வரைக்கும், தமிழ்நாட்டை பாழாக்கி, தலைகுனிய வைத்த அதிமுக. 2014ல் இருந்து இந்தியாவை மோசமான நிலைக்கு அழைத்து சென்றிருக்கும் பாஜவிடம் சரணாகதி அடைந்து ஒரு கூட்டணி அமைத்திருக்கிறது! அந்த கூட்டணியில், பாஜக கிளைச்செயலாளராக இருக்கிறார், அதிமுகவை அழிவு பாதையில் அழைத்து செல்லும் திரு பழனிசாமி அவர்கள். பாஜ கிளைச் செயலாளராக இன்றைக்கு மாறியிருக்கிறார்.

இப்போது அவர், நம்முடைய தேர்தல் அறிக்கையை பார்த்து, புலம்ப தொடங்கியிருக்கிறார். அது என்ன மாதிரியான புலம்பல் என்றால், நம்முடைய திட்டங்களான மகளிர் உரிமைத்தொகை, கனவு இல்லம், விடியல் பயணம் போன்ற திராவிட மாடல் திட்டங்களைக் காப்பியடித்து, அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் வெளியிட்ட அவர், நம்முடைய தேர்தல் அறிக்கையைப் பார்த்து, காப்பி அடித்துவிட்டோம் என்று புலம்புகிறார்.

பழனிசாமி அவர்களின் அறிவுத்திறத்திற்கு, சேக்கிழார் எழுதிய கம்பராமாயணம் தொடங்கி, பல எடுத்துக்காட்டுகள் இருந்தாலும், இப்போது புதிதாக ஒரு எடுத்துக்காட்டு வந்திருக்கிறது. அவருக்கு எதைப் பற்றியும் புரிதல் கிடையாது, தொலைநோக்கு பார்வையும் இல்லை என்பதை தன்னுடைய உளறல்களால் நிரூபித்துக் கொண்டிருக்கிறார். அவரின் உளறல்களிலேயே ஹைலைட் எது தெரியுமா? “எப்படி உங்களின் திட்டங்களை நிறைவேற்றுவீர்கள்” என்று கேட்டால், “வரியை உயர்த்தி நிறைவேற்றுவோம்” என்று சொல்கிறார். பழனிசாமி அவர்களால் மட்டும்தான், இப்படியெல்லாம் சிந்திக்க முடியும்! அதனால்தான், அந்தளவிற்கு பழனிசாமி அவர்களை, ஈஸியாக மிரட்டி, தங்களின் அடிமைக் கூட்டணியில் வைத்திருக்கிறது பாஜ.

அந்த என்டிஏ கூட்டணிக்கு ஒரே ஒரு நோக்கம்தான், தமிழ்நாட்டு வளர்ச்சியை தடுக்க வேண்டும். திராவிட மாடல் ஏற்படுத்தியிருக்கும் இந்த வளர்ச்சியை அழிக்க வேண்டும். இதுதான், என்டிஏ கூட்டணியின் நோக்கம். தமிழ்நாட்டில் நம்மை எதிர்ப்பதற்கு வலிமை இல்லை என்று, அ.தி.மு.க.வை விலைக்கு வாங்கியிருக்கிறது. சென்னை மெட்ரோ திட்டத்திற்கு நிதி தரவில்லை. ஓசூர் விமான நிலையத்திற்கு அனுமதி கேட்டிருக்கிறோம், தரவில்லை குடிநீர் திட்டத்திற்கான நிதியும் தரவில்லை. இத்தனை தடைகளையும் சமாளித்துப் பல்வேறு சாதனைகளை நாம் செய்திருக்கிறோம். திறமையான நிர்வாகத்தால் ‘நம்பர் ஒன்’ மாநிலமாக உயர்ந்திருக்கிறோம்.

இருப்பதிலேயே என்ன கொடுமை என்றால்? இந்தி திணிப்பை ஏற்றுக்கொள்ளவில்லை என்று, நம்முடைய வீட்டு குழந்தைகள் படிப்பதற்கான கல்வி நிதியைக்கூட இதுவரைக்கும் கொடுக்கவில்லை. இப்படி வஞ்சக எண்ணம் கொண்ட கூட்டத்திடம் தமிழ்நாட்டின் எதிர்காலத்தை ஒப்படைக்க முடியுமா? இப்படிப்பட்ட வஞ்சக கூட்டத்திடம் தமிழ்நாட்டு மக்களை ஒப்படைக்க முடியுமா? என்டிஏ வைத் தமிழ்நாடு புறக்கணிக்க வேண்டும்! அப்போதுதான், தமிழ்நாட்டின் எதிர்காலம் காப்பாற்றப்படும்.

கரப்ஷன், கமிஷன், கலக்ஷன் என்று ஆட்சி நடத்திய பழனிசாமி அவர்களை மிரட்டி கூட்டணி அமைத்து, தமிழ்நாட்டின் உரிமைகளை பறித்து, வரிசையாக பல துரோகங்களை செய்து, பிரிந்த மாதிரி நாடகங்களை நடத்தி, கடைசியாக இப்போது, டெல்லியில் தீர்மானித்து, தோற்பதற்காக தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறது என்.டி.ஏ இதுதான் உண்மை. அதனால்தான் சொன்னேன்… இந்த தேர்தல் என்பது, தமிழ்நாடு அணி vs டெல்லி அணி! தமிழ்நாடு vs என்டிஏ. தமிழ்நாட்டை காக்க வேண்டும் என்றால், திமுகதான் மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும், தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து நடைபோட வேண்டும் என்றால், திமுக ஆட்சியில் தொடர வேண்டும், தமிழ்நாடு கலவர பூமியாக மாறாமல் இருக்க வேண்டும் என்றால், பாஜக - அதிமுக கூட்டணியையும், வேரோடு வீழ்த்த வேண்டும்.

நாம் போராடுவது, திமுகவின் வெற்றிக்காக மட்டுமல்ல, திமுக தலைமையில் அமைந்திருக்கும் கூட்டணியின் வெற்றிக்காக மட்டுமல்ல, இது தமிழ்நாட்டின் வெற்றி. எனவே, அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு, நம்முடைய தாய்த்தமிழ்நாட்டை காக்க, தமிழ்நாட்டு மக்கள் அனைவரும், திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியை ஆதரிக்க வேண்டும். அமைய இருக்கும் திராவிட மாடல் 2.0 ஆட்சியில், எங்களின் சாதனைகளை நாங்களே முறியடிக்கும் அளவிற்கு சிறப்பான ஆட்சியை வழங்குவோம்.

ஏப்ரல் 23 அன்று, நீங்கள் வாக்களிக்கச் செல்லும்போது நீங்கள் சிந்திக்க வேண்டியது, ஒன்றே ஒன்றுதான், என்டிஏவின் தமிழர் விரோத சந்தர்ப்பவாத கூட்டணியா? திமுக சாதனைகளின் தொடர்ச்சியா? என்பதை சிந்தித்து வாக்களியுங்கள்… தமிழ்நாடு வளம் பெற… நல்லாட்சி தொடர்ந்திட… ஆதரிப்பீர் உதயசூரியன் ஆதரிப்பீர் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர்களை! உதயசூரியன், உங்கள் சூரியன்! உதயசூரியன், உங்கள் சூரியன் வெல்வோம் ஒன்றாக. நன்றி வணக்கம். இவ்வாறு அவர் பேசினார்.

## சாலையில் நடந்து சென்று வாக்கு சேகரிப்பு

திருவாரூர் தெற்கு ரதவீதியில் நேற்று இரவு முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரசார கூட்டத்தை முடித்து கொண்டு தியாகராஜ சுவாமி கோயில் மேலகோபுரம் வரை சுமார் 100 மீட்டர் தூரம் நடந்து சென்றார். தேரோடும் மேலவீதியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் நடந்து செல்லும் போது சாலையின் இருபுறமும் நின்ற பொதுமக்கள் உற்சாக வரவேற்பு கொடுத்தனர். அவர்களை பார்த்து முதல்வர் கை அசைத்தவாறு சென்றார். அங்கு நின்ற மூதாட்டி ஒருவரிடம், முதல்வர் மு.க.ஸ்டாலின் நான் யார் என்று தெரிகிறதா? என்று கேட்டார். அதற்கு மூதாட்டி நீ என் பேரப்பிள்ளை, உன்னை மறக்க முடியுமா?. எங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் ஓட்டு அனைத்தும் உனக்குதானப்பா என்று கூறினார். அதன் பின்னர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அங்கிருந்து கார் மூலம் திருச்சி புறப்பட்டு சென்றார்.

## திமுக கூட்டணியில்

# தேமுதிகவுக்கு 10, விசிகவுக்கு 8 தொகுதிகள்

### கமல்ஹாசனின் ம.நீ.ம கட்சி போட்டியிடவில்லை என அறிவிப்பு



தமிழக சட்டசபை தேர்தலில் திமுக கூட்டணியில் தேமுதிகவுக்கு 10 இடங்கள், விசிகவுக்கு 8 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்கான ஒப்பந்தம் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் நேற்று கையெழுத்தானது. அதேநேரத்தில், மநீம போட்டியிடாது என்று அறிவித்த நடிகர் கமல், முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து ஆதரவு தெரிவித்தார். தமிழகம் முழுவதும் பிரசாரம் செய்ய உள்ளதாகவும் தெரிவித்தார். தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த மாதம் 23ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் வருகிற 30ம் தேதி தொடங்க உள்ளது.

தேர்தலுக்கு இன்னும் குறுகிய நாட்களே உள்ளதால் அனைத்து அரசியல் கட்சிகளும் முழுவீச்சில் தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. திமுகவை பொறுத்தவரை இந்த தேர்தலில் மெகா கூட்டணியை அமைத்துள்ளது. திமுக கூட்டணியில் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை முடிந்து இதுவரை காங்கிரஸ் 28 தொகுதிகள், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கட்சிகளுக்கு தலா 5 தொகுதிகள், மதிமுக 4 தொகுதிகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சிக்கு தலா 2 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதுவரை திமுக கூட்டணியில் 7 கட்சிகளுக்கு 48 தொகுதிகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

விசிகவுடன் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை தொடர்ந்து நடந்து வந்தது. இந்நிலையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக மூத்த நிர்வாகிகள் டி.ஆர்.பாலு, கே.என்.நேரு, திருச்சி சிவா, ஆ.ராசா, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ஆர்.எஸ்.பாரதி ஆகிய 7 பேர் அடங்கிய குழுவினருடன் விசிக தலைவர் திருமாவளவன் தலைமையில் ரவிக்குமார், சிந்தனை செல்வன் உள்ளிட்ட நிர்வாகிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இதில் சுமுக உடன்பாடு ஏற்பட்டது. இந்த பேச்சுவார்த்தையில் விசிகவுக்கு 8 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.

இதை தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், திமுக- விசிக இடையே தொகுதி பங்கீடு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினும், விசிக தலைவர் திருமாவளவனும் கையெழுத்திட்டனர். அந்த ஒப்பந்தத்தில், "நடைபெற உள்ள 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில், திமுக தலைவரும், முதல்வர் மு.க.ஸ்டாலினும்- விடுதலை



சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவனும் இன்று (நேற்று) தொகுதி உடன்பாடுகள் குறித்து கலந்து பேசியதில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம்பெற்றுள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சி, தமிழ்நாட்டில் 8 சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடுவதெனவும், அவற்றில் 6 தனி தொகுதிகளும், 2 பொது தொகுதிகளிலும் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது\\" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் கையெழுத்தான போது விசிக எம்பி ரவிக்குமார், எம்எல்ஏக்கள் சிந்தனைச் செல்வன், எஸ்.எஸ்.பாலாஜி, ஜெ.முகம்மது ஷா நவாஸ், விசிக துணை பொதுச் செயலாளர் வன்னியரசு மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர். இதற்கிடையில் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா, "மற்றவர்கள் விட்டுக் கொடுக்கும் பொழுது தேமுதிகவும் விட்டுக் கொடுக்கும். அதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை. ஒரு கூட்டணி வெற்றிகரமாக செல்ல வேண்டுமானால் மற்றவர்கள் விட்டுக்கொடுக்கும் போது தேமுதிகவும் விட்டுக்கொடுக்கும்\\" என்று நேற்று முன்தினம் அறிவித்து இருந்தார்.

இந்நிலையில் திமுக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலினை சென்னை அண்ணா அறிவாலயத்தில் தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா நேற்று மாலை சந்தித்து பேசினார். அவருடன் தேமுதிக பொருளாளர் எல்.கே.சுதீஷ், இளைஞர் அணி செயலாளர் விஜய பிரபாகர், தலைமை நிலைய செயலாளர் பார்த்தசாரதி உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர். இதை தொடர்ந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், திமுக-தேமுதிக இடையே தொகுதி பங்கீடு ஒப்பந்தம் கையெழுத்தானது.

அந்த ஒப்பந்தத்தில், "நடைபெற உள்ள 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில், திமுக தலைவரும், முதல்வர் மு.க.ஸ்டாலினும்- தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதாவும் இன்று (நேற்று) தொகுதி உடன்பாடுகள் குறித்து கலந்து பேசியதில், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் இடம்பெற்றுள்ள தேமுதிகவுக்கு, தமிழ்நாட்டில் 10 சட்டமன்றத் தொகுதிகளில் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது" தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் திமுக தனது கூட்டணியில் உள்ள 9 கட்சிகளுக்கு 66 தொகுதிகளை ஒதுக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

அதை தொடர்ந்து நடிகர் கமல்ஹாசன் நேற்று இரவு முதல்வர் மு.க.ஸ்டாலினை, அண்ணா அறிவாலயத்தில் சந்தித்துப் பேசினார். அப்போது, மநீம தேர்தலில் போட்டியிடவில்லை. அதேநேரத்தில், திமுக கூட்டணியை ஆதரிப்போம். தமிழகம் முழுவதும் பிரசாரமும் செய்வோம் என்று உறுதியளித்தார். அப்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவருக்கு நன்றி தெரிவித்தார். இதை தொடர்ந்து, கூட்டணியில் உள்ள எஸ்டிபிஐ, மனிதநேய ஜனநாயகக் கட்சி, தமிழர் விடுதலைக் கட்சி, முக்குலத்தோர் புலிப்படை, கொங்கு இளைஞர் பேரவை உள்ளிட்ட மற்ற கட்சிகளுடனும் அடுத்தடுத்து பேச்சுவார்த்தை நடத்தி தொகுதிகளை ஒதுக்க திமுக திட்டமிட்டுள்ளது.

ஓரிரு நாளில் தொகுதிகளை ஒதுக்கி, எந்தெந்த தொகுதிகள் என்பதையும் அறிவிக்க திட்டமிட்டு ள்ளது. இதற்கிடையில் சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள இல்லத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின், தொகுதி பங்கீடு குழுவுடன் நேற்று காலை ஆலோசனை நடத்தினார். அப்போது கூட்டணி கட்சிகளுக்கான தொகுதிகளை விரைவில் ஒதுக்கி, கூட்டணி கட்சிகளுக்கான தொகுதிகள் எவை என்பதை அடையாளம் காண வேண்டும் என்று கேட்டு கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

## 9 கட்சிகளுக்கு 66 தொகுதிகள் ஒதுக்கீடு

காங்கிரஸ் 28

தேமுதிக 10

விடுதலை சிறுத்தைகள் கட்சி 8

மார்க்சிஸ்ட் 5

இந்திய கம்யூனிஸ்ட் 5

மதிமுக 4

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் 2

மனிதநேய மக்கள் கட்சி 2

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி 2

மொத்தம் 66

## 175 தொகுதிகளில் திமுக சின்னம்

காங்கிரஸ், தேமுதிக, விசிக, மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் மட்டும் தங்களது சின்னத்தில் போட்டியிடுகின்றன. மதிமுகவுக்கு ஒதுக்கப்பட்ட 4 தொகுதிகளில் ஒரு தொகுதியில் மட்டும் அக்கட்சி சின்னத்தில் போட்டியிடுகிறது. மற்ற 3 தொகுதிகளில் திமுக சின்னத்தில் போட்டியிடுகிறது. இதனால் சிறிய கட்சிகளுக்கு தலா ஒரு தொகுதிகள் ஒதுக்கினாலும், அவர்களும் திமுக சின்னத்தில் போட்டியிடுகின்றனர். இதனால் 175 தொகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் வேட்பாளர்கள் போட்டியிட உள்ளனர். கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த சின்னத்தில் 59 பேர் போட்டியிடுகின்றனர்.

# திமுகவை நம்பியவர்கள் நடுரோட்டில் நிற்பார்கள்

## மயிலாப்பூர் பிரச்சாரத்தில் பழனிசாமி ஆவேசம்

“அங்கீகாரம் இல்லாத கட்சிகளுக்கு அதிகம் இடம்; அங்கீகரிக்கப்பட்ட விசிக-வுக்கு குறைந்த தொகுதி. இனியாவது உணர்ந்துகொள்ளுங்கள், திமுக-வை நம்பியவர்கள் நடுரோட்டில் நிற்பார்கள்” என்று, மயிலாப்பூரில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்தார்.



அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தேர்தல் அறிவிப்புக்குப் பிறகான தனது தேர்தல் பிரச்சாரத்தை, வளர்பிறை முகூர்த்த நாளான நேற்று மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் வழிபாடு செய்து, மயிலாப்பூர் தொகுதிக்கு உட்பட்ட மந்தைவெளி புனித மேரி சாலையில் திரண்டிருந்த மக்கள் மத்தியில் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:

நான் ஏற்கெனவே 193 தொகுதிகளில் மக்களை சந்தித்து வாக்குகளை சேகரித்தேன். அது மிகப்பெரியவெற்றியைக்கொடுத்தது. இறைவன் அருளால் அதிமுக தலைமையிலான தே.ஜ.கூட்டணி 210 இடங்களில் வென்று, அதிமுக அறுதிப்பெரும்பான்மையுடன் ஆட்சியமைக்கும். திமுக-வின் நிலை இன்று பரிதாபமாக உள்ளது. திமுக கூட்டணி அமைப்பதற்கு 20 நாட்களாகப் போராடினார்கள். ஒவ்வொரு கட்சியும் பதறிக்கொண்டிருக்கிறது. அவர்கள் போராடியே தொகுதி பெறும் அவல நிலை உள்ளது. திமுக கூட்டணிக் கட்சிகள் அடிமையாக உள்ளனர். ஆனால், அதிமுக கூட்டணித் தலைவர்கள் சுதந்திரமாக உள்ளனர்.

திமுக-வில் 10 ஆண்டுகாலம் பயணிக்கிறோம் என்கிறார்கள். அதனால் தான் 2021 தேர்தலை விட குறைவான இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். திமுக-விடம் ஆட்சி இருக்கும்போது, அவர்களை புகழ்ந்து பாட உங்களை பயன்படுத்திக்கொண்டார்கள். ஆனால், தேர்தலில் உங்களுக்குத் தகுந்த அந்தஸ்து கொடுக்காத கட்சி திமுக. கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் போராடிப் பார்த்தார்கள், நிர்வாகிகள் கூட்டத்தை கூட்டிப்பார்த்தார்கள். ஆனாலும் கடந்த தேர்தலை விட குறைவான தொகுதிகளைப் பெற்றுள்ளனர்.

விசிக-வும் எவ்வளவோ போராடி 8 இடங்களை மட்டுமே பெற்றனர். அங்கீகாரம் இல்லாத கட்சிகளுக்கு அதிகம் இடம்; அங்கீகரிக்கப்பட்ட விசிக-வுக்கு குறைந்த தொகுதி. இனியாவது உணர்ந்துகொள்ளுங்கள், திமுக-வை நம்பியவர்கள் நடுரோட்டில் நிற்பார்கள். அதிமுக கூட்டணியில் கட்சிகளுக்கு உரிய மரியாதை கிடைக்கிறது. 5 ஆண்டுகால திமுக ஆட்சியில் மக்களுக்கு துன்பம் தான் மிஞ்சியது. திமுக என்றால் குடும்பக் கட்சி, வாரிசு அரசியல். 5 ஆண்டு திமுக ஆட்சியில் சென்னை மக்களுக்கு துரும்பைக் கூட கிள்ளிப் போடவில்லை. அதிமுக ஆட்சியில் தான் பிரம்மாண்டத் திட்டங்கள் வந்தன.

எப்போது பார்த்தாலும் கொள்ளை அடிப்பதுதான் குறிக்கோள். கலெக்‌ஷன், கமிஷன், கரப்‌ஷன் இதுதான் அவர்களின் தாரக மந்திரம், இதைத்தான் 5




ஆண்டுகளாகச் செய்தார்கள். ஸ்டாலின் ஆட்சியில் முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி, மருமகன் சபரீசன், மனைவி துர்கா என்று 4 அதிகார மையங்கள் உள்ளன. இவற்றுக்கு முடிவுகட்டக்கூடியது தான் வரக்கூடிய தேர்தல். நாடு செழிக்க வேண்டுமென்றால் சட்டம்-ஒழுங்கு சிறப்பாக இருக்கவேண்டும். அப்படி இல்லாமல் தமிழகம் சீரழிகிறது என்றால் இதற்கு காரணம், திறனற்ற முதல்வர் ஆள்கிறார். எனவே, இந்த குற்றங்களை எல்லாம் தடுப்பதற்கு அதிமுக தலைமையிலான தே.ஜ.கூட்டணி மிகப்பெரிய வெற்றி பெற வேண்டும்.

இந்தத் தொகுதி நமது கூட்டணியில் பாஜக-வுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பாஜக-வின் வேட்பாளருக்கு தாமரை சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற வையுங்கள். சென்னை மாநகரத்தில் மற்ற தொகுதிகளில் போட்டியிடும் அதிமுக-வுக்கு இரட்டை இலை சின்னத்திலும், பாமக போட்டியிட்டால் மாம்பழம் சின்னத்திலும், அமமுக வேட்பாளர் போட்டியிட்டால் குக்கர் சின்னத்திலும் வாக்களியுங்கள். அவர்களை வெற்றி பெறச் செய்யுங்கள் மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம். ஸ்டாலின் மாடல் அரசு ஃபெயிலியர் மாடல் அரசு. பை பை ஸ்டாலின். இவ்வாறு அவர் பேசினார்.

**ஸ்டாலின் ஆட்சியில் முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி, மருமகன் சபரீசன், மனைவி துர்கா என்று 4 அதிகார மையங்கள் உள்ளன. இவற்றுக்கு முடிவுகட்டக்கூடியது தான் வரக்கூடிய தேர்தல்.**

## தமிழிசை பேட்டி:

பழனிசாமியுடன் தேர்தல் பிரச்சாரத்தில் பங்கேற்ற தமிழிசை சவுந்தரராஜன் செய்தியாளர்களிடம் பேசுகையில், “மக்கள் இன்று மிகுந்த மன வேதனையுடன் இருக்கின்றனர். தமிழக முதல்வராக பழனிசாமி பதவியேற்று, இரட்டை இன்ஜின் அரசு தமிழகத்தில் அமையும்போது மக்களுக்கு நிச்சயம் பலன் தரும். பாஜக வேட்பாளர்கள் யார் என்பது கட்சி அறிவித்த பிறகு தான் தெரியவரும். தென் சென்னை நாடாளுமன்ற தொகுதி வேட்பாளராக போட்டியிட்ட காரணத்தால், மயிலாப்பூரில் பழனிசாமி பிரச்சாரத்தில் கலந்து கொண்டிருக்கிறேன்.

மயிலாப்பூரில் எங்களுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. நான் மயிலாப்பூரில் போட்டி போடுகிறேனா என்பது தெரியாது. ஆனால், தமிழகத்தில் போட்டியிடுவேன். பாஜக-வுக்கு சென்னையில் மட்டுமே பிரதிநிதித்துவம் இருக்கக் கூடாது அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சென்னையில் ஒரு தொகுதி மட்டும் பெறப்பட்டுள்ளது.

கன்னியாகுமரியில் பாஜக பலமாக இருப்பதால் 5 தொகுதிகளைப் பெற்றிருக்கிறோம். எதிர் கூட்டணி கலங்கப்பட்டுஇருப்பதால், தமிழகத்தில் எங்களுக்கு களம் நன்றாக இருக்கிறது” என்றார். ●

# தமிழக பாஜக வேட்பாளர் பட்டியல் வெளியீடு



**சென்னை:** தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக தலைமையிலான கூட்டணியில் போட்டியிடும் பாஜக வேட்பாளர்கள் பட்டியலை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, நயினார் நாகேந்திரன் சாத்தூரிலும், தமிழிசை சவுந்தர்ராஜன் மயிலாப்பூரிலும், எல்.முருகன் அவிநாசி (தனி) தொகுதியிலும், வானதி சீனிவாசன் கோவை வடக்கிலும் போட்டியிடுகின்றனர். அண்ணாமலை தேர்தலில் போட்டியிடவில்லை.

தமிழகத்தில் வரும் 23-ம் தேதி சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறுகிறது. இத்தேர்தலில், 4 முனைப் போட்டி நிலவும் சூழலில் அதிமுக தலைமையிலான பாஜக, பாமக, அமமுக, தாமக உள்ளிட்ட கட்சிகள் இடம்பெற்றுள்ளன. இதில், பாஜகவுக்கு 27 தொகுதிகள் ஒதுக்கப்பட்டது. கடந்த முறை 20 தொகுதிகளில் போட்டியிட்ட பாஜக இம்முறை 27 தொகுதிகளில் களம் காண்கிறது.

தமிழக பாஜக வேட்பாளர்கள் விவரம்:

1. ஆவடி - ராஜசிம்ம மஹிந்திரா என்ற அஸ்வின் குமார்
2. மயிலாப்பூர் - தமிழிசை சவுந்தர்ராஜன்
3. தளி - நாகேஷ் குமார்
4. திருவண்ணாமலை - ஏழுமலை
5. ராசிபுரம் (தனி) - பிரேம்குமார்
6. மொடக்குறிச்சி - கிருத்திகா சிவகுமார்
7. உதகமண்டலம் - போஜராஜன்
8. அவிநாசி (தனி) - எல்.முருகன்
9. திருப்பூர் தெற்கு - தங்கராஜ்
10. கோவை வடக்கு - வானதி சீனிவாசன்
11. திருவாரூர் - கோவி. சந்துரு
12. தஞ்சாவூர் - முருகானந்தம்
13. கந்தர்வக்கோட்டை (தனி) - உதயகுமார்
14. புதுக்கோட்டை - ராமச்சந்திரன்
15. அறந்தாங்கி - கவிதா ஸ்ரீகாந்த்
16. திருப்பத்தூர் - திருமாறன்
17. மானாமதுரை (தனி) - பால கணபதி
18. மதுரை தெற்கு - ராம ஸ்ரீநிவாசன்
19. சாத்தூர் - நயினார் நாகேந்திரன்
20. ராமநாதபுரம் - நாகேந்திரன்
21. திருச்செந்தூர் - ராதாகிருஷ்ணன்
22. வாசுதேவநல்லூர் (தனி) - ஆனந்தன் ஐயாசாமி
23. ராதாபுரம் - பாலகிருஷ்ணன்
24. நாகர்கோவில் - காந்தி
25. குளச்சல் - சிவக்குமார்
26. பத்மநாபபுரம் - ரமேஷ்
27. விளவங்கோடு - விஜயதரணி

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலில் பாஜக 4 தொகுதிகளில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

# காங்கிரஸ் வேட்பாளர் பட்டியல் வெளியீடு



தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான காங்கிரஸ் வேட்பாளர்கள் பட்டியல் அறிவிக்கப்பட்டுள்ளது. கட்சியின் மாநில தலைவரான செல்வப்பெருந்தகை ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் போட்டியிடுகிறார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்கான காங்கிரஸ் வேட்பாளர்கள் பட்டியலை அக்கட்சியின் அகில இந்திய அமைப்பு பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால் வெளியிட்டுள்ளார். அதன்படி, பொன்னேரி (தனி) தொகுதியில் துரை சந்திரசேகர், வேளச்சேரியில் ஆசன் மவுலானா, ஸ்ரீபெரும்புதூரில் (தனி) செல்வப்பெருந்தகை ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

சோளிங்கரில் ஏ.எம். முனிரத்தினம், ஊத்தங்கரையில் (தனி) குப்புசாமி, கிருஷ்ணகிரியில் செல்ல குமார், பென்னாகரத்தில் ஜி.கே.எம். தமிழ் குமரன், ஆத்தூரில் (தனி) எஸ்.கே. அர்த்தனாரி, ஈரோடு(கிழக்கு) தொகுதியில் கோபிநாத் பழனியப்பன், உதகமண்டலத்தில் பி. ராமச்சந்திரன் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

கவுண்டம்பாளையத்தில் சூர்ய பிரகாஷ், சிங்காநல்லூரில் ஸ்ரீநிதி நாயுடு, துறையூரில் (தனி) விச்சு லெனின் பிரசாத், கடலூரில் சந்திரசேகரன், மைலாடுதுறையில் ஜமால் யூனுஸ் முகம்மது ஆகியோர் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர்.

அறந்தாங்கியில் டி. ராமச்சந்திரன், காரைக்குடியில் எஸ். மாங்குடி, உசிலம்பட்டியில் டி. சரவணகுமார், சிவகாசியில் கணேசன் அசோகன், திருவாடானையில் ராம கரு மாணிக்கம், ஸ்ரீவைகுண்டம் தொகுதியில் ஊர்வசி அமிர்தராஜ் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

சங்கரன்கோவில் (தனி) தொகுதியில் சங்கை கணேசன், அம்பாசமுத்திரத்தில் வி.பி. துரை, நாங்குநேரியில் ரூபி மனோகரன், கொளச்சல் தொகுதியில் தாரகை கத்பெர்ட், விளவங்கோடு தொகுதியில் டி.டி. பிரவீண், கிள்ளியூரில் ராஜேஷ் குமார் ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

# விசிக, இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளர்கள் அறிவிப்பு

## காட்டுமன்னார்கோவிலில் திருமா போட்டி



திமுக கூட்டணியில் இடம் பெற்றுள்ள விசிக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, எஸ்டிபிஐ கட்சிகள் போட்டியிடும் தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். காட்டுமன்னார்கோவில் தொகுதியில் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் போட்டியிடுகிறார்.

திமுக அணியில் விசிக-வுக்கு 8 தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. இந்தத் தொகுதிகளுக்கான வேட்பாளர்களை கட்சியின் தலைவர் திருமாவளவன் நேற்று இரவு அறிவித்தார். அதன்படி, காட்டுமன்னார்கோவில் தொகுதியில் திருமாவளவன் போட்டியிடுகிறார்.

மேலும் அக்கட்சியின் சார்பில் திண்டிவனம் தொகுதியில் வன்னியரசு, கள்ளக்குறிச்சியில் மாலதி, பண்ருட்டியில் அப்துல் ரகுமான், அரக்கோணத்தில் எழில் கரோலினா, செய்யூரில் சிந்தனைச் செல்வன், திருப்போரூரில் பன்னீர்தாஸ், பெரியகுளத்தில் ஆற்றல் அரசு ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

திமுக அணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட 5 தொகுதிகளுக்கான வேட்பாளர்களை கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் அறிவித்தார்.

அதன்படி, திருத்துறைப்பூண்டியில் க.மாரிமுத்து, தளி தொகுதியில் டி.ராமச்சந்திரன், பவானிசாகரில் பி.எல்.சுந்தரம், திருப்பூர் வடக்கு தொகுதியில் ரவி (எ) எம். சுப்பிரமணியம், ஸ்ரீவில்லிபுத்தூரில் பி.மகாலிங்கம் ஆகியோர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர். கதிர்அரிவாள் சின்னத்தில் இவர்கள் போட்டியிடுகின்றனர்.

இதில் டி.ராமச்சந்திரன் மற்றும் க.மாரிமுத்து ஆகியோர் ஏற்கெனவே தளி மற்றும் திருத்துறைப்பூண்டியில் எம்எல்ஏ.க்களாக உள்ளனர்.

ரவிக்கும், பி.எல்.சுந்தரத்துக்கும் கடந்த முறை போட்டியிட்ட அதே தொகுதிகளில் மீண்டும்வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. வேட்பாளர் அறிவிப்புக்கு பின் செய்தியாளர்களிடம் மு.வீரபாண்டியன் கூறுகையில், "திமுகவிடம் நாங்கள் கேட்ட 5 தொகுதிகளை கிடைக்கபெற்ற நிலையில், மாநிலக் குழு, மாவட்டக்குழு கூட்டங்களை கூட்டி வேட்பாளர்களை தேர்வு செய்து ஒருமனதாக அறிவித்துள்ளோம்.

இவர்கள் ஐவரும் கட்சியின் மாணவர் அமைப்பு,இளைஞர் அமைப்புகளில் பணிபுரிந்தவர்கள். இந்த சட்டப்பேரவை தேர்தலில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிடும் 5 தொகுதிகளிலும்நிச்சயமாக வெற்றி பெறுவோம்." என்று கூறினார்.

மேலும், திமுக கூட்டணியில் எஸ்டிபிஐ கட்சிக்கு நன்னிலம் தொகுதி ஒதுக்கப்பட்டது. இந்தத் தொகுதியில் வேட்பாளராக அக்கட்சியின் மாநிலத் தலைவர் முகமது முபாரக் அறிவிக்கப்பட்டுள்ளார். ●

RNI No. TNTAM / 2021 / 85933

# தமிழ்நாட்டில் பத்திரிகையாளர் நலன் காப்பது யார்?

## திமுக ஆட்சியில் பத்திரிக்கையாளர்கள் கண்ணீர்



- கடந்த 5 ஆண்டு கால திமுக ஆட்சியில் பத்திரிகையாளர்களுக்கு பஸ் பாஸ், அடையாள அட்டை புதிதாக வழங்கப்படாமல் இழுத்தடித்து கடைசியில் அலைந்து திரிந்து ஏமாற்றம் தான் மிச்சம்.
- மாவட்ட பத்திரிகையாளர்களுக்கு அரசு அங்கீகார அட்டை வழங்குவது போன்று ஒரு நாடகத்தை போட்டு பத்திரிகையாளர்களை நம்ப வைத்து கடைசி வரையில் வழங்க வில்லை.
- கடந்த காலத்தில் வழங்கப்பட்ட பத்திரிகைகளுக்கு அரசின் மூலம் எந்த அரசு விளம்பரமும் கிடைப்பதில்லை. பல ஆண்டுகளுக்கு நூலகங்களுக்கு வழங்கப்பட்ட நூலக ஆர்டர்களை ரத்து செய்துவிட்டு தனக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் நூலக ஆர்டர்கள் வழங்கப்பட்டு வருகிறது.
- வீட்டுவசதி வாரியக் குடியிருப்புகளில் முன்னுரிமை அடிப்படையில் சிறப்பு ஒதுக்கீடுஇதுபோன்றபல சலுகைகளை கொண்டு உள்ள பலசலுகைகளைகொண்டு உள்ள இந்த பத்திரிகையாளர் அங்கீகார அட்டை பலருக்கு வழங்கப்படுவதில்லை

- மாநில அளவில் மட்டுமின்றி, தாலுகா அளவில் உழைக்கும் உள்ளூர் பத்திரிகையாளர்கள், புகைப்படக் கலைஞர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட இணையதள நிருபர்களுக்கும், அரசு அங்கீகார அட்டை, மருத்துவக் காப்பீடு மற்றும் ஓய்வூதியம் பாரபட்சமின்றி வழங்கப்படும்.
- சொந்தமாக வீடு கட்ட விரும்பும் அங்கீக ரிக்கப்பட்ட மற்றும் அங்கீகாரம் இல்லாத (ஆனால் நீண்ட காலமாகப் பணியாற்றும்) உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கும் கூட்டுறவு வங்கிகள் மூலமாக ரூ. 10 லட்சம் வரை முழுமையான வட்டியில்லா வீட்டுக் கடன் வழங்கப்படும்.
- பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டத்தில் வருமான உச்சவரம்பு நீக்கப்படும்.
- தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களில், பத்திரிகையாளர்கள் வீடுகட்டிக் கொள்வதற்கு குடியிருப்பு மனைகள் வழங்கப்படும்.
- தற்போது பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியம், இனி காட்சி ஊடகவியளர்களுக்கும் வழங்கப்படும்.

Printed/Published /Owned by **G. B. PACHAIYAPPAN** Printed at Seaman Graphics at
No 7/253 K.V. N. Puram, 2nd Street, Kilpauk Gardan, Chennai - 600010.
Published at No. E-44 Rajamuthaiyapuram, Raja Annamalaipuram, Mandaiveli, Chennai - 28.
Editor-**G.B. PACHAIYAPPAN** Email : saandrorkural@gmail.com, Mobile:9962235002



# ‘மதராஸி’ தோல்வி: ஏ.ஆர்.முருகதாஸ் மீது புகார்



‘மதராஸி’ படத்தின் தோல்வியை முன்வைத்து தயாரிப்பாளர் சங்கத்தில் இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ் மீது புகார் அளிக்கப்பட்டுள்ளது.

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் சிவகார்த்திகேயன், ருக்மணி வசந்த் உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவான படம் ‘மதராஸி’. கடந்த ஆண்டு செப்டம்பர் 5-ம் தேதி பெரும் எதிர்பார்ப்புடன் இப்படம் வெளியானது. ஆனால் இப்படம் எதிர்பார்த்த வரவேற்பினை பெறவில்லை. மேலும், படமும் எதிர்பார்த்த வசூலை பெறாமல் தோல்வியை தழுவியது. இதனிடையே, தயாரிப்பாளர் மற்றும் இயக்குநர் சங்கத்தில் ‘மதராஸி’ படத்தின் தயாரிப்பாளர், இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ் மீது புகார் அளித்துள்ளார். ‘மதராஸி’ படத்தினை ரூ.115 கோடியில் முடிப்பதாக கூறிவிட்டு, 170 கோடி வரை செலவாகிவிட்டதாகவும், இதற்கு ஏ.ஆர். முருகதாஸ் சரியாக திட்டமிடாததே காரணம் என்று அப்புகாரில் கூறப்பட்டது. ஏனென்றால், இந்த சமயத்தில் ‘மதராஸி’ மற்றும் ‘சிக்கந்தர்’ என்று இரண்டு படங்களை ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கி வந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த புகாரை முன்வைத்து ஏ.ஆர்.முருகதாஸிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. இந்த நஷ்டத்தை சரிசெய்யும் விதமாக, ‘மதராஸி’ தயாரிப்பாளருக்கு ‘ரமணா 2’ படத்திற்கான தெலுங்கு கதையினை எழுதிக் கொடுக்க சம்மதம் தெரிவித்துள்ளார் ஏ.ஆர்.முருகதாஸ். இதற்கு ‘மதராஸி’ தயாரிப்பாளரும் சம்மதம் தெரிவித்திருப்பதால் இப்புகார் முடிவுக்கு வந்திருப்பதாக கூறப்படுகிறது.

# சிம்புவுக்கு நாயகியாக ருக்மணி வசந்த் ஒப்பந்தம்



சிம்பு நடிக்கவுள்ள படத்தின் நாயகியாக ருக்மணி வசந்த் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். ‘அரசன்’ படத்தினை முடித்துவிட்டு, அஸ்வத் மாரிமுத்து இயக்கத்தில் உருவாகும் படத்தில் நடிக்க முடிவு செய்துள்ளார் சிம்பு. ஏஜிஎஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ள இப்படத்தின் முதற்கட்ட பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. இதற்கான நடிகர்கள் மற்றும் தொழில்நுட்ப கலைஞர்கள் ஒப்பந்தம் நடைபெற்று வருகின்றன. இதில் சிம்புவுக்கு நாயகியாக நடிக்க ருக்மணி வசந்த் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகவுள்ளது. அவருடன் இணைந்து மேலும் சிலரும் சிம்புவுடன் நடிக்கவுள்ளனர். பெரும் பொருட்செலவில் இப்படத்தினை தயாரிக்க ஏஜிஎஸ் நிறுவனம் முடிவு செய்திருக்கிறது. இதில் சந்தானம் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவிருப்பதை இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து உறுதி செய்திருக்கிறார். சிம்பு சந்தானம் கூட்டணி நீண்ட வருடங்கள் கழித்து இதில் இணைந்து நடிக்கவுள்ளனர். இதற்காக சந்தானத்திற்கு பெரும் தொகையினை சம்பளமாக கொடுத்துள்ளது ஏஜிஎஸ் நிறுவனம்.




கல்யாண சீர்வரிசை பாத்திரங்கள் மற்றும்
பர்னிச்சர்கள் வாங்க கைராசியான ஸ்தாபனம்
பேக்டரி விலைக்கே கிடைக்கும்
நல்லதே செய்வோம்! துவக்கம் 1983 நல்லதே நடக்கும்!
நிதில் & கோ
35 ஆண்டுகளாக மக்கள் சேவையில்... (கைராசியான ஸ்தாபனம்)
368/2, T.H.ரோடு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை–21. Ph : 044: 2590 0947, 2596 2323